வைத்திய அட்டவணை

12

335

335

ஏ.முத்தையா,
அப்பு வைத்திய சாலை,
வடிவேஸ்வரம், நாகர்கோவில்,
~~சேலம்.~~ 1/2
"வைத்திய அட்டவணை கட்டு-1".

335

தேதி: 9.4:64.
ஓலைச்சுவடியின் பெயர்: "வைத்திய அட்டவணை"-கட்டு-1.
உரிமையாளரின் பெயர்: ஏ.முத்தையா, அஞ்சு
இடம்: அப்பு வைத்திய சாலை, வடிவேல்வரம், நாகர்கோவில்.

***

காளமேக நாராயண செந்தூரம்:-

இரதம்60, சுத்தி பண்ணின கெந்தகம்.60, சாதிலிங்கம்.15, அரிதாரம்.8 மனோசிலை.உ, இவைகளை சுத்தி பண்ணி இரத்தத்தைச் சாறணைச் சாறு விட்டு மத்தித்து பிறகு எடுத்துக் கொள்ளவும். கெந்தகத்தை வாழைத் தண்டு சாறும், வெள்ளாட்டுப் பாலும் ஒரு கலசத்தில் விட்டுக் கம்புளி கொண்டு கலசத்து வாயைக் கட்டி அதின் மேலே கெந்தகத்தை வைத்து ஒரு குழியில் கலசத்தை வைத்துக் கொண்டு மூடி யதின் மேலே மணல் கொண்டு மூடி மேலே தீ யெரிக்கக் கெந்தக முருகிக் கலசத்தில் விழும். அப்படிச் சுத்தி பண்ணின கெந்தக மெடுத்துக் கொள்ளவும். சாதிலிங்கத்தை பொடி செய்து எலுமிச்சை சாறு கொண்டு கழுவிப் போடவும். அரிதாரத்தை புரோசிலைச் சாறு கொண்டு கழுவிப் போடவும். இப்படிச் சுத்தி பண்ணின பிறகு முன் சொன்ன நிறையாக நிறுத்துக் கொண்டு எருக்கலம் பால் விட்டு ஒரு சாமம் அரைத்து புரோசிலைச் சாறு விட்டொரு சாமமரைத்து தும்பை யிலை சாறு விட்டொரு சாமமரைத்து செருப்படிச் சாறு விட்டொரு சாமமரைத்து பிறகு செம்முள்ளிச் சாறு விட்டொரு சாமமரைத்து அதின் பிறகு மாதளையிலைச் சாறு விட்டு இரண்டு சாமமரைத்ததின் பிறகு முருங்கையிலை சாறு விட்டொரு சாமமரைத்து பொடி பண்ணி கெங்கா சலக் குப்பியை ழி யேழு சீலை மண் செய்து உலர விட்டு மருந்தைக் குப்பி யரை மட்டு மிட்டுக் குப்பி வாயை வளப்பக் கல்லுக் கொண்டடைத்து முன் சொன்ன அடை மண் கொண்டடைத்து ஒட்டி யடுப்பு வண்ணான் வெள்ளாவி யடுப்பு போட்டு ஒரு தாளியைப் பதித்து விரல் கனம் மணலிட்டு அதிலே குப்பியை வைத்து அந்தக் குப்பிக்குள் மட்டும் மணலிட்டு விநாயக பூசை செய்து தீபாக்கினி ஒரு சாமம் கமலாக்கினி இரண்டு சாமம் காடாக்கினி இருபத்தொரு சாமமெரித்து மறுநாள் தீயாறப் போட்டு வயிரவ பூசை செய்து குப்பியை யுடைத்து ஒன்றில் வைத்துக் கொள்ளவும். இந்த செந்தூரம் முருக்கம் பூப் போலே யிருக்கும். இதுக்கு அநுபானம் இதிலரைப் பணவிடையும், திரிகடுகு வெதுப்பிப் பொடி செய்து கண்டங்கத்திரி யிலைச் சாறும், தூதுவளைச் சாறும், சுத்தாளைச் சாறும் விட்டவியலாக அவித்து அந்த தண்ணீருந் தேனுமிந்த மருந்தும் கூட்டிக் குழைத்துத் தின்ன யீளை, இருமல், இளைப்பு, எலிகடி, மந்தார காசம், க்ஷய சுவாசம், சேற்பனம், மூர்ச்சை, சன்னி மூர்ச்சை, மேலிளைப்பு; உப்பிசம் பத்து நாளிருபது போது தின்னத் தீரும். இதி லரைப் பண விடையும், திப்பிலி வெதுப்பிப் பொடி செய்து களஞ்சு தேனும் கும்ப்பி அந்தி, சந்தி நாற்பது நாள் கொள்ளப் பதினேழு வகைச் சூலைப் புண்ணும் குட்டரமும் பதினெட்டுக் குட்டமும் குறை நோவும், கட்டு விஷமும், வண்டு கடியும், செவ்வட்டை கடியும், கபால குஷ்டமும், கபால கட்டு விஷமும், சிரங்கு, சொறி, அரையாப்பு, அரைப் புத்து காலில் கட்டு விஷம், நெஞ்சு நோக்காடு, அத்தி பீனிசமும், மண்டை சூலை, கண்ணோசி, காது சிக்காது; மடல் வீக்கம் இவை யெல்லாந் தீரும். இதில் ஒரு பணவிடை வெங்காயத்தில் இரண்டு நேரமும் பத்து நாள்க் கொள்ள சன்னி 18 வகையும் வாத மூர்ச்சை, பித்த மூர்ச்சை, சேற்பன மூர்ச்சை, சன்னி மூர்ச்சை, உதர வாதம், மரப்பு வாதம், கரை கரை கண்ணோசி, சிலந்தி இவை யெல்லாந் தீரும்.

இதிலரைப் பணவிடையும் வெண்காரம்.1 பணவிடை, அசமதம் 1 பணவிடை சுக்கு 1 பணவிடை, மிளகு 1 பணவிடை இவை யெல்லாம் வெதுப்பிப் பொடி செய்து முருங் கைப் பட்டைத் தண்ணீரில் லோக செந்தூரம் ஒரு பணவிடை கூட்டி இரண்டு போது நாற்பது நாள்க் கொள்ள சன்னி வாதம், பக்ச வாதம், உதர வாதம், முடக்கு வாதம், சிறுவாங்க வாதம், தோல் வாதம், நடுக்கு வாதம், எரி வாதம், தறுவாதம், உள் வலிப்பு புற வலிப்பு, கெண்டை வாதம், சத்தி குன்மம், எரி குன்மம், வலி குன்மம், அஷ்ட குன்மம், சூலை வாய்வு, நீரடைப்பன், யிந்திர கண்டி யிவை முதலான வியாதி யெல்லாந் தீரும். இதில் அரைப் பணவிடையும், நில வாகைச் சாத்தில் பத்து நாள்க் கொள்ள கெற்ப விப்புருதி, பல விப்புருதி, தோள விப்புருதி கல் விப்புருதி, உள் மாந்தை, சரமாந்தை, பக்க வாய்வு, அண்ட வாய்வு, குடல் வாதம், குறை வாதம், கல்வாதம், யோனி சூலை, நாவி சூலை, வாத சூலை, தீரை சிறு புழு யிவை யெல்லாந் தீரும்.

சிந்தாமணி யிரத செந்தூரம்:-

சுத்தி பண்ணின யிரதம் பலம்.உ, கெந்தகம் பலம்.$2\frac{1}{2}$, வெங்காரம் பலம்.உ மனோசிலை பலம்.$\frac{1}{2}$ இவை யெல்லாம் சுத்தி பண்ணிக் கொள்ளவும். மாதளை யிலைச சாறு விட்டொரு நாளரைக்கவும். மிளகு, தர்ளிச் சாறு விட்டு ஒரு நாளரைக்கவும். மாதளம் பூச் சாறு விட்டு ஒரு நாளரைக்கவும். முருங்கைப் பச் சாறு விட்டு ஒரு நாள ரைக்கவும். வெட்சிப் பூச் சாறு விட்டு ஒரு நாளரைக்கவும். பொடி பண்ணிக் கெங்கா சலக் குப்பி கிடையா விட்டால் பிறதி காக்குப் பியுமாம்இந்* இந்தக் குப்பி ஏழு சீலை மண் செய்துலர விட்டு ஒட்டி யடுப்புப் போட்டு அதிலே ஒரு தாளியைப் புதைத்து குப்பியை வளப்பக் கல்லுக் கொண்டு அடைத்து அடை மண் கொண்டு அடைத்து தாளியில் நால் விரல்க் கனம் மணலிட்டுக் குப்பியை வைத்துக் குப்பிக்கு மட்டும் மணலிட்டு நிரம்ப வைத்து விநாயக பூசை பண்ணி அடுப்பிலே தீப் போடவும். தீபாக்கினி ஒரு சாமம் கமலாக்கினி இரண்டு சாமம் காடாக்கினி21 சாமம் எரியிட்டு நாலா நாள் தீயைப் பிரித்து வயிரவ பூசை பண்ணி செந்தூர மெடுத்துக் கொள்ளவும். இதிலொரு பணவிடை மங்கிலியப் பெண்டுகள் கொண்டு எடுத்துத் தரச் சொல்லி அவளைப் பார்பதியாகக் கொண்டு தானீசுரனுகப் பாவித்துக் கொண்டு அபிஷேகஞ் செய்திட நாமமிட்ட மருந் தெல்லாம் பலிக்கும். இதிலொரு பணவிடையும், சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு,

குருசானி ஓம், அதிவிடையம் ஒவ்வொன்று ஒரு களஞ்சு வெதுப்பிப் பொடி செய்து இந்தப் பொடி வெருகடிப் பிரமாணம் தேனில் குழைத்து பத்து நாள் கொள்ள ஆறுவகையுந் தீரும். இதிலொரு பணவிடையும், மாடுக் கிழங்கு உலர்த்திப் பொடி செய்து வெருகடிப் பிரமாணம் இரண்டு நேரமும் இருபது நாள் கொள்ள மூலம் ஒன்பது வகையும் கூட்டோடே யறுத்துப் போடும். பத்தியம் கோழிக் கறி, கீரைத் தண்டு, கூட்டிக் கொள்ளவும். இதிலொரு பணவிடையும் இரத கற்பூரத்திலே கால் பணவிடையும் பறங்கிப் பட்டைச் சூரணம் வெருகடிப் பிரமாணம் தேனில் இரண்டு நேரம் கொள்ள புண் குட்டரோகம் 17, வகையும் வாதம் 80 வகையும், கரப்பான் 32 வகையும் கிரந்தி 27 வகையும் விற்புருதி யுண்டானதுந் தீரும். இதிலொரு பணவிடையும் இரத கற்பூரத்தில் கால் பணவிடையும், வெருகங் கிழங்கு; விளாம் பொருக்குத் தயிலம் வைத்துத் தயிலத்தில் இரண்டு நேரம் நாற்பது நாள்க் கொள்ளவும். குஷ்டம் பதினெட்டும், வண்டு கடி விஷ கடியும், சிரங்கு, சொறியும், கபால குட்டம் முதலான காலில் கட்டு விஷமுந் தீரும். இதிலொரு பணவிடையும்; காந்த செந்தூரம் ஒரு பணவிடையும், அப்பிரக செந்தூரம் ஒரு மாவும் வங்க பற்பம் அரைப் பணவிடையும் அமுர்த சர்க்கரை வெருகடிப் பிரமாணம் சீனி வெருகடிப் பிரமாணம் ஆவரைத் தயிலத்தில் குழப்பி இரண்டு நேரமும் நாற்பது நாள்க் கொள்ளச் சகல கனிச்சல் இருபது வகையும், சுக்கிலப் பிரமியம் பதினெட்டு வகையும், மூத்திரக் கிரிச்சினம் இருபது வகையும் எலும்புருக்கி பதினாறு வகையும், உஷ்ண ரோகம் உண்டான தெல்லாம் தீரும். இதிலொரு பணவிடையும், பிரசம் பட்டை தயிலத்தில் கொள்ள குன்மம் எட்டு வகையும், வாய்வு இருபது வகையும் தீரும். இதிலொரு பணவிடையும் தாமரைப்பூ அல்லிப்பூ ஆகுதல் செங்கழுநீர்ப் பூவாகுதல் பத்து நாள்க் கொள்ள மகா உஷ்ண ரோகம் ஐந்தும் இருபத்தாறும் தீரும். இதிலொரு பணவிடையும், வெற்றிலைச் சாற்றில் கொடுக்க நாலு நாள் மாறலும், அஸ்தியைப் பற்றின சுரமிவை தீரும். இதிலொரு பணவிடை வில்வாதி லேகியத்தில் இருபது நாள்க் கொடுக்க ஈளை, இருமல், எலி கடி மந்தார காசம், காச சுவாசம், உள் மாந்தை, சுரமாந்தை, கசங்க மாலை, சத்தி குன்மம், வலி குன்மம், எரி குன்மம் அட்ட குன்மம், பஞ்ச குன்மம் இவை யெல்லாந் தீரும்.

<u>இரத்தின மாணிக்க பஞ்ச அலங்கார செந்தூரம்</u>:-

சுத்தி பண்ணின இரசிதம் 60, கெந்தகம் 30, மாணிக்கப் பொடி 65, வெண்காரம் 25, மனோசிலை 10, அரிதாரம், 50, சாதிலிங்கம் 60, செம்முள்ளிச் சாறு விட்டொரு சாமமரைத்து மாதுளையிலைச் சாறு விட்டொரு சாமமரைக்கவும். கஞ்சா யிலைச் சாறு விட்டு ரெண்டு நாளரைக்கவும். கூத்தன் குதம்பைச் சாறு விட்டு ஒரு சாமம் அரைத்துப் பொடி பண்ணி கெங்கா சலக் குப்பியில் ஏழு சீலை மண் செய்து உலர விட்டு குப்பி யரை மட்டும் உப்புக் கொட்டி வாயை வளப்பக் கல்லுக் கொண்டு அடைத்து கட்டு மண் கொண்டு அடைத்து ஒட்டி யடுப்புப் போட்டு அதிலே யொரு தாளியைப் புதைத்து நாலு விரல் கனம் மணலிட்டு விநாயக பூசை பண்ணி தீபாக்கினி ஒரு சாமம் கமலாக்கினி இரண்டு சாமம் காடாக்கினி 21 சாமம் தீ எரித்து நாலா நாள் தீயாற விட்டு குப்பியை யுடைத்து செந்தூர மெடுத்துக் கொள்ளவும். இதில் அரைப் பணவிடையும் திரிகடுகு, வெதுப்பிப் பொடி செய்து வெருகடிப் பிரமாணம் தேனில் குழைத்து இரண்டு போது நாற்பது நாள்க் கொள்ள ஈளை, இருமல், எலி கடி, மந்தார காசம், காய சுவாசம், சுவாச காசம், உள்மாந்தை, சுரமாந்தை, சங்கமாலை யிலை புத்துரப்பு சேற்றுமம் மூர்ச்சை யிவை யெல்லாந் தீரும்.

இந்த செந்தூரத்தை கருவாளைப் பூச் சாற்றில் இரண்டு போது பத்து நாள்க் கொள்ள ரத்தப் புத்து, மலப் புத்து, ரெத்த ரோகம், பெரும்பாடு பல்கிட்டு வெடிவாதம், விழுகிறதும் வெட்டுப் பட்ட காயத்தினாலே ரெத்தம் விழுகிறதும் பிள்ளைப் பெற்றதினாலே ரெத்தம் விழுகிறதும் இப்படிச் சரீரத்திலெந்த வகையினாலும் ரெத்தம் விழுகிறதும் தீரும். இந்தச் செந்தூரத்தி லரைப் பணவிடையும் கல்நார், சாத்திரவேதி, குகைநீர், கல்மதம், இது வெல்லாங் கொட்டைப் பாக்களவு ஆவரை யல்லியும் இலந்தைக் கொழுந்தும், எலுமிச்சங் காயளவு முன் சொன்ன மருந்தை பசுவின் பாலிலே அரைத்துச் சீனியும் போட்டு இப்படி பத்து நாள் கொடுக்க முன் சொன்ன ரெத்தங்கள் நின்று சீயா யெடுக்கிறதும் உள்மாந்தை, சுரமாந்தை யிவை யெல்லாந் தீரும். இதில் அரைப் பணவிடையும் முத்தெருக்கஞ் செவியும் களச்சியிலைச் சாற்றில் பத்து நாள் குடிக்க அண்டப் பவுத்திரம், அண்டப் பிளவை கழல் வாதம், கொடிவாதம், நரை வாதம், ரெத்த வாய்வு, அண்டப் புத்து, அண்ட சத்து இவை எல்லாந் தீரும்: இதில் அரைப் பணவிடையும், மதன காமீசுரத்தில் தின்ன தாது விளையும். சன்னாசி யருக்குந் தாது விளையும். கிழவன் கிழவிக்குந் தாது விளையும். இந்தச் செந்தூரத்திலரைப் பணவிடையும் யிரதமொரு பயத்திடையும் பச்சைப் புழுகுங் கூட்டி மெழுகு பீக்கங் காய்ச் சாறு விட்டரைத்து தண்டில் பூசிப் புணர நொந்த தண்டு பருக்கும். உள்ளே தரித்ததும் பழையபடி ஆற அங்கலத்துக்கு வரும். லிங்கத்தை மொக்கையும் கண்டும் அரும்பிரையுந் தீரும். இந்தச் செந்தூரத்தில் அரைப் பணவிடையும் அலரியிலைச் சாற்றிலரைத்து முகத்தில் வங்குந் தீர முகத்தில் பூசவும். முகத்தில் கருப்பும் முகத்தில் புள்ளியுந் தீரும். இதிலரைப் பணவிடையும் புவரசங்காய் தண்ணீரிலரைத்துப் பூச அரும்பாறை எச்சில் தருவளையும் தீரும்: இதிலொரு பணவிடையும் அலிசம் வேரும் நிலவாகை வேரும் எலுமிச்சம் பழச் சாறு விட்டரைத்து மேலே பூசப் படர் தாமரை தீரும். இதை நாவிலும் பற் கண்டத்திலும் தேய்க்க வாய் நாற்றந் தீரும். இதில் அரைப் பணவிடையும் வீளியிலைச் சாற்றிலும் முடக் கொத்தான் சாற்றிலும் பத்து நாள்க் கொள்ள தாது விளைந்து பால் பொங்கிறப் போலே பொங்கி பாற் சமுத்திரம் போலே யாம். இதிலொரு பணவிடையும் வேப்பம் பட்டை தயிலத்தில் நாற்பது நாள்

கொள்ள பதினெட்டு குட்டமுங் குறை நோவுந் தீரும். என்றறியவும்.

<u>சறுவ வியாதிக்கு யிரத செந்தூரம்:-</u>

சுத்தி பண்ணின யிரதம்.60 பணவிடை சுத்தி பண்ணின கெந்தகம் 40 சாதிலிங்கம்.15, வெண்காரம்.10, பச்சை நாவி.20, மனோசிலை..20, வெங்காரமும் சுத்தி பண்ணி முன் மருந்து மிதுவுங் கூட்டிச் செருப்படிச் சாத்தில் ஒரு சாமமரைக்கவும். கூத்தாளைச் சாற்றிலொரு சாமமரைக்கவும். மாதளம் பூச் சாத்திலாவது தும்பை யிலைச் சாத்திலாவது இரண்டு நாளரைத்து பொடி செய்து கெங்கா சலக் குப்பியிலேயு சீலை மண் செய்து உலர்ந்து ஆற விட்டு இந்த மருந்து குப்பியரை மட்டு மிட்டு வாயை வளப்பக் கல்லுக் கொண்டடைத்து முன் சொன்ன அடை மண் கொண்டடைத்து ஒட்டி யடுப்பு வெள்ளாவி யடுப்பு போட்டு அதிலே ஒரு தாளியைப் புதைத்து நாலு விரல் கனம் மணலிட்டு விநாயக பூசை பண்ணி தீபாக்கினி ஒரு சாமம் கமலாக்கினி யிரண்டு சாமம் காடாக்கினி இரண்டு சாமம் எரியிட்டு வயிரவ பூசைப் பண்ணி நாலு நாளாற விட்டு குப்பியை யுடைத்துப் பார்க்க முருக்கம் பூப் போலே யிருக்கும். ஒன்றில் வைத்துக் கொள்ளவும். இந்த செந்தூரத்தி லரைப் பணவிடையும், திரிகடுகு வெதுப்பி பொடி செய்ன வெருகடிப் பிரமாணம் தேனில் இரண்டு நேரமும் நாற்பது நாள் கொள்ள சூலை 17, வாய்வு26 குன்மம் பதினாறும் தீரும். இதிலொரு பணவிடை அங்கோலம் மரத் தயிலத்தில் கொள்ளப் பதினெட்டு குட்டமும் குறை நோவும், கட்டு விஷமும், வண்டு கடியும், காணக் கடியும், விஷக்கடி, எலிகடி, கபால குட்டமும், வாத ரோகமும், காலி கடி விஷமும் செய்யான் கடி செவ்வட்டை கடி மற்று முண்டான புழுக் கடிகள் இவை யெல்லாந் தீரும். இதிலொரு பணவிடையும், நொச்சி சாற்றில் கொள்ள வாதம் 80, சன்னி பதினெட்டும் பித்தம்.20-ம் தீரும். இந்த செந்தூரத்தில் அரைப் பணவிடையும்; வங்க பற்பமரைப் பணவிடையும், ஆவரைத் தயிலத்தில் நாற்பது நாள் கொள்ள நீரழிவு20-ம் மூத்திரக் கிரிச்சினம் யிந்திர கண்டியும் சோம ரோகம் பன்னிரண்டு வகையும்; வாய்வு நடுக்கம் ஆறு வகையும் உப்புச் செவியும், நாக்கு களகம் உள்நாக்கு சிறு நாக்கு தொண்டைக்குள் புண்ணும் நாக்குச் சிலந்தியுந் தீரும்.

<u>ரச செந்தூரம்:-</u>

சிவந்த பொன்னாங்கண்ணிச் சாரம், பொன்னுவாரை யிலைச் சாரம், சம்பா வரிசித் தவிட்டையும் அரைத்து ஐந்து காசிடையாகத் தட்டி ஒரு சட்டியில் வைத்து மேல் சட்டி கொண்டு மூடி சீலை மண் செய்து அடுப்பில் வைத்து இத்திச் சிப்பியினாலே விளக் கெரித்தாப் போலே முப்பது நாழிகை எரித்து இறக்கி ஆற விட்டு எடுத்துப் பார்க்கிற போது சிவந்திருக்கும் போது எடுத்து வைத்துக் கொள்ளவும். இதுக்கு அநுபானம் திப்பிலிப் பொடியில் கூட்டிக் கொடுக்க தீராக் கிராணியும், ரத்தக் கிராணி வாய்வுக் கிராணி, பவுந்திரம், சுரம் பாரிச வாய்வு, முடக்கல், பறங்கிப் புண், சூலை பல நோய்களுந் தீரும்.

<u>அரிதார பற்பம்:-</u>

ஏழு வெத்திலை ஏழு பாக்கும் கூட்டி யிடித்து தெளிந்த தண்ணீரில் சுண்ணாம்பு கலந்து டோளங் கட்டி மேல் ஒரு சட்டியில் வைத்து ஒரு சட்டி கொண்டு மூடி எட்டு நாழிகை தீ யெரித்து எடுத்து அந்தக் கிளியில் யிருந்த அரிதாரத்தை எடுத்து சீலையில் கிளியில் தண்ணீர் வடிய விட்டு பிறகு கையாந்தகரை வேர் கடுக்காய் இது இரண்டும் சரி கூட்டி எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து அந்தக் கிளியைப் பொதிந்து பூசி உலர வைத்து அதின் மேலே ஒரு களஞ்சு நீருமிட்டு சீலை மண் செய்து எருவில் பன்றிப் புடமிடவும். 3 நாழிகை வேக விட்டு பற்ப மெடுத்துக் கொள்ளவும். இதுக்கு அநுபானம் நீரழிவுக்கு ஒரு பணவிடை சர்க்கரையில் கொடுக்கத் தீரும். தலை மண்டை நோவுக்கு நல்லெண்ணெயில் கொடுக்கவும். பிறகு இந்தப் பொடியை சீலையில் பத்திரிச்ச எண்ணெயில் தோய்த்து மூக்கில் புகை பிடிக்க தலை மண்டை நோவு போக்கும்: வெப்புப் பாவை சத்தி குன்மத்துக்கு தேனில் கொடுக்கவும். பித்த பாண்டுவுக்கு மோரில் கொடுக்கவும். ஊன் மாங்கிசத்துக்கு எல்லாம் எலுமிச்சம் பழச் சாற்றில் கொடுக்கவும். ஆனந்த வாய்வுக்கு வென்னீரில் கொடுக்கவும். பறங்கி குட்டம் யியல் வியாதிகளுக்கு மாங்காய் நீரில் கொடுக்கவும். வயத்துக் கடுப்புக்கு ரெச்தமாறுல் தயிரில் கொடுக்கவும். வாத ரோகத்துக்கு நெய்யில் கொடுக்கவும். கருங் குட்டத்துக்கு தும்பை யிலை வேக வைத்து இறக்கிக் கொடுக்கவும்.

<u>அரிதார செந்தூரம்:-</u>

சுத்தி பண்ணின அரிதாரம் பலம்.க, யிரதம் பலம்.க, கெந்தகம் பலம்.க, கிட்டின அப்பிரகம் பலம்.க இது நாலுஞ் சுத்தி பண்ணிக் கொண்டு பொடி செய்து பொடி வெவ்வேறே வைத்துக் கொண்டு கெங்கா சலக் குப்பி கொண்டு வந்து முன்பு தீயாக அப்பிரகம் பாதியிடவும். அதின் மேலே கெந்தகம் பாதியிடவும்.. அதின் மேலே அரிதார எல்லாமிட்டு அதின் மேலே யிரதம் எல்லாமிட்டு அதின் பிறகு அப்பிரகத்தில் பாதியும் கெந்தகத்தில் பாதியுமிட்டு குப்பி வாய் வளப்பக் கல்லுக் கொண்டு மூடி சீலை மண் செய்து சட்டியில் மணலிட்டு குப்பியை நடுவே வைத்துச் சட்டி கொண்டு மூடிச் சீலை மண் செய்து கமலாக்கினி ஒரு சாமம் எரித்து ஆற விட்டுஎடுத்து அந்தக் குப்பியை யுடைத்து வேறே ஒரு குப்பியிலிட்டு குப்பியில் பன்னி நெய் நிரம்ப வார்த்து குப்பி வடிப்பமாக வளப்பக் கல்லுக் கொண்டு மூடி மணலிட்டு நடுவே வைத்து மேலே சட்டி கொண்டு மூடி சட்டி வாய் சீலை மண் செய்து ரச செந்தூரம் வைத்து முன் எரித்தாப் போலே எரிக்கவும். மற்று இரண்டு சாமம் எரித்து ஆற விட்டு எடுத்துப் பார்க்கிற போது நல்ல செந்தூரமாயிருக்கும். இது பதினெண் குட்டம் பல வியாதி யெல்லாந் தீரும். இதுக் கநுபானம் அறிந்து கொடுக்கவும்.

வயத்தில் செத்த பிள்ளை விழ :-

ஐஞ்சுயாந் தகரை யாதல் முக்காவளை யாதல், நாசம் பண்ண வயத்தில் செத்த பிள்ளை விழும். கீழ்வாய் நெல்லியை அரைத்து நல்லெண்ணெயில் விழுங்கச் செத்த பிள்ளை விழும்.

விடூத்துக்கு அஞ்சனம் :-

தும்பி ஐந்தும், மிளகு படி1/8-ம் இரசம் பணவிடைக-ம் குளவித்து 5 விராகனிடையும் வேம்பு விரை படி1/8-ம் வேக வைத்து பிடி தீத்தாலே உரைத்துக் கண்ணிலிட விடூங்களெல்லாம் தீரும்.

கண்டமாலைக்கு மருந்து :-

மாதளம் வித்து அரைத்து வென்னீரில் கொடுக்கத் தீரும்.

சன்னிக்குத் தயிலம் :-

ரசம் க பணவிடை, அரிதாரம் க பணவிடை, சாதிலிங்கம் க பணவிடை, மனோசிலை க பணவிடை, திப்பிலி க. பணவிடை, நாவி க பணவிடை கோழி முட்டை மஞ்சள்க் கரு மூன்றும் சரி கூட்டி அனியில் தோய்த்து வேப்பெண்ணை விட்டு திரியில் தோய்த்து கொளுத்தித் தயிலம் வாங்கி உள்ளுக்கு பணவிட கொடுத்து மூக்கிலேயும் செவியிலேயும் அடைத்து தேக மெல்லாம் போடவும். சன்னி 13-ந் தீரும்.

சன்னி வாதத்துக்கு உருண்டை :-

ரசம், நாவி, கெந்தகம், நேர்வாளம், அரிதாரம், திப்பிலி, மிளகு, பொரிகாரம், முசுமுட்டை, தேவதாரம், கோரோசனை, ஏலம், லவங்கம், இது வெல்லாம் வகை ஒன்றுக்கு ஒரு களஞ்சு சரி கூட்டி திசை மூலக் கசாயம் வில்வ வேர், நிலக் குமுள் வேர், பாதிரி வேர், முன்னை வேர், ஆமணக்கு வேர், கண்டங்கத்திரி வேர், சிறுவழுதலை வேர், உள்ளொட்டி வேர், பிற ஒட்டி, ஆடாதோடை வேர், நெருஞ்சி வேர் இந்தக் கசாயத்தில் அரைத்து அதின் பிறகு கொடிவேலி கசாயத்தில் அரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி இஞ்சிச் சாற்றில் கொடுக்க வாதத்தில் எழுந்த சன்னி தீரும்.

கெற்ப விப்புருதிக்கு :-

வீளியிலையை அரைத்து நல்லெண்ணெயில் கொடுக்க கெற்பந் தரிக்கும்.

இருமலுக்கு மருந்து :-

பொன்னரிதாரம், எருக்கங் கொழுந்து, மிலந்தை, தம்பலம் அரைத்துச் சீலையிலூட்டி திரியாக்கி விளக்கில் கொளுத்தி எருக்கங் கம்பில் புகை குடிக்க மாறும்.

பித்தத்துக்கு மருந்து :-

தேத்தாம் பழம் நாழி, கடுக்காய் 17, சுக்கு தேறு.3, நெய் கொட்டம் பழம்.10 ஆக சீலையிலூட்டிப் பிழிந்து அரைத்துக்குடிக்கத் தீரும்.

சத்தி கேட்டுக்கு :-

குளப் பாலை வேரை பசுவின் பாலிலரைத்துக்குடிக்கத் தீரும்.

ஊது காமாலைக்கு :- நிலவாகை வேரைப் பசுவின் பாலிலரைத்துக் குடிக்கத் தீரும்.

பிள்ளைப் பிணிக்கு :-

வெள்ளைக் கொடி வேலி வேர், குறிமுண்டான் வேர், சிறு புள்ளடி வேர் ஆக வேர் மூன்றுங் குளிச மாடி கழுத்தில் கட்டவும் தீரும்.

குளி தோஷத்துக்கு :-

விடத்தலை வேர், செந்நாயுருவி வேர், சுடு காட்டு பருத்தி வேர் ஆக வேர் மூன்றும் குளிச மாடிக் கட்டத் தீரும்.

வயிரவ செந்தூரம் :-

வயிரத்தாளப் பொடி.10 பணவிடை கண்டங்கத்திரிச் சாறு விட்டு ஒரு சாமம் அரைத்து தகடாகப் பிடித்து ஒரு ஓட்டில் வைத்து ஒரு ஓடு கொண்டு மூடிச் சீலை மண் செய்து வறுகிப் புடமிடவும். பிறகு எடுத்துக் கொண்டு சாதிலிங்கஞ் சரி கூட்டி எலுமிச்சம் பழச் சாறு விட்டரைத்து அடையாகப் பிடித்து ஒரு ஓட்டில் வைத்து ஒரு ஓடு கொண்டு மூடி யேழு சீலை மண் செய்து கெஜ்ஜ புடமிடவும். இப்படி மூன்று நாள் புடமிடவும். ஆறவிட்டு எடுத்துக் கொள்ளவும். இந்தச் செந்தூரத்தில் ஒரு பணவிடை திரிகடுகு வெதுப்பி பொடி செய்து வெப்கடிப் பிரமாணம் தேனில் 40 நாள் கொள்ள சரீரத்திலுண்டான வியாதியெல்லாம் தீரும். முன் சொன்ன செந்தூரத்தில் அநுபானத்தின் படியே பார்த்திட்டு வரவும்.

பஞ்ச ரெத்தின செந்தூரம் :-

மாணிக்கம் பணவிடை.20, வைடூரியம்.10, கோமேதகம்.க, புஷ்ப ராகம்.க, வயிரம்.க, பட்சை.க, இதுக்குச் சரி யிரசம் 5பணவிடை சாதிலிங்கம்.5, வெள்ளைப் பசாணம்.5 யிவை சேர முரித்துக் கொண்டு

கண்டங்கத்திரி யிலை, நவ்வல் பட்டை சிறுவழுதலஞ் சாறு விட்டரைத்து இருபது நாழிகை அரைத்து ஒரு ஓட்டிலே தப்பி ஆலங் கொழுந்து அரைத்துக் கீழு மேலும் வைத்து மத்தொரு ஓடு மூடிச் சீலை மண் செய்து வராகிப் புடமிடவும். தீயாற விட்டெடுத்துக் கொண்டு யிதிலொரு பணவிடை கற்கண்டு வெருகடிப் பிரமாணம் தேனில் இரண்டு நேரமும் நாற்பது நாள் கொள்ள சேற்றுமம் 9 , பித்தம் 128, அதிலுண்டான வியாதி யெல்லாந் தீரும். யிதிலொரு பணவிடையும் அட்ட சூரணம் வெருகடிப் பிரமாணம் தேனில் குழைத்து இரண்டு நேரம் நாற்பது நாள் கொள்ள [illegible] வாதம். 80, அதிலுண்டான வியாதியெல்லாந் தீரும். இதிலொரு பணவிடை சாதிக்காய், சாதிபத்திரி, குருசாணி ஓமம், அதிவிடையம், வெதுப்பி பொடி செய்து தேனில் குழப்பி இரண்டு நேரமும் நாற்பது நாட் கொள்ளக் கிருணி 6-ம் அதிசாரம்12 வகையும் தீரும். தாது விர்த்திக்கும். இதிலொரு பணவிடை கறளைக் கிழங்கும், காட்டுக் கறளைக் கிழங்கும், மாடுக்கிழங்கும், கொடிவேலி வேரும் உலர்த்திப் பொடி செய்து இதுக்குச் சரி திப்பிலி கூட்டிக் கொண்டு வெருகடி பிரமாணம் இரண்டு நேரமும் 40 நாள் கொள்ள மூலம் 9-ம் சோபமூலி சாகமும் மகோதரமும், பெருவயிறும், வயிற்றில் வியாதியுண்டானதும் குட்டம் 18-ம் குறை நோவு மற்று முண்டான வியாதி எல்லாந் தீரும். இதிலொரு பணவிடை சர்க்கரையில் வைத்து இரண்டு நேரமும் 40 நாள் கொள்ள புண் குட்டோரத்தில் உண்டான வியாதி எல்லாந் தீர்ந்து சரீரத்திலுள்ள வியாதி எல்லாந் தீர்ந்து சரீரம் வச்சிர காயமாக யிருக்கும். முன் சொன்ன அநுபானத்தின் படி இடவும்.

<u>நவரெத்தின் மாணிக்க செந்தூரம்:-</u>

மாணிக்கம் பொடி பலம்.20, முத்துப் பொடி பலம்.20, பவளம் பலம்.10 சங்குப் பொடி பலம்.10, அரப்பொடி பலம்.10, பொன் பலம்.5, வெள்ளி பலம்.5, வயிரம் பலம்.5, வைடூரியம் பலம்.5, கோமேதகம் பலம்.5, புஷ்பராகம்.5, புரோசனை பலம்.5, இருபத்தம் பலம்.5, சர்ளக் கிருமம் பலம்.5, ருத்திராட்சம் பலம்.5, இரதம் பலம்.க, கெந்தகம் பலம்.க, சாதிலிங்கம் பலம்.க, மனோசிலை பலம்.½, அரிதாரம் பலம்.½, ஊசிக் காந்தம் பலம்.½, கெவுரி பாசாணம் பலம்½ இவை யெல்லாந் தனித் தனி சுத்தி யாக்கிக் கொண்டு கத்தாழைச் சாறு விட்டு மூன்று நாள் அரைத்து தக்டாகப் பிடித்து ஒரு பானையில் வைத்து அது நிரம்ப கத்தாழைச் சாறு விட்டு ஒரு சட்டி கொண்டு மூடி சட்டி வாயை ஏழு சீலை மண் செய்து அடுப்பில் வைத்து சட்டி மேலே ஒரு கல்லு வைத்து 4 நாள் தீ யெரித்து தீப் பிரித்து ஆற விட்டு எடுத்துக் கொள்ளவும். இந்தச் செந்தூரத்துக்கு அநுபானம் இதிலொரு பணவிடையும் அப்பிரக செந்தூரத்தில் ஒரு பயத்திடையும் ஆவரந் தயிலத்தில் பத்து நாள் கொடுக்கச் சலக் கழிச்சல் தீரும். இதிலொரு பணவிடையும் முலைப் பாலில் கொடுக்க ஒரு நாள் ஒரு நாள் கொடுக்கச் சுரந் தீரும். இதிலொரு பயத்திடை வெத்திலைச் சாத்தில் கொடுக்க மாறலுங் குளிரும் அத்தியைப் பற்றின சுரமுந் தீரும். இதிலொரு பயத்திடையும் வெற்றிலைச் சாத்தில் கொடுக்க மாறலுங் குளிரும். அத்தியைப் பற்றின சுரமுந் தீரும். இதிலொரு பயத்திடையும் வெற்றிலைச் சாத்தில் கொடுக்க மாறலுங் குளிரும் அத்தியைப் பற்றின சுரமுந் தீரும். இதிலொரு பயத்திடை வெல்லத்தில் பத்து நாள் கொடுக்க புண் குட்டோர முண்டானதும் சூலைக் கடுப்புண்டானதும் பதினெட்டுக் குட்டமுந் தீரும். நோவும் செவ்வட்டை கடியும் வண்டு கடியும் மேற்கண்ட விஷமும், சிரங்கு சொறியுந் தீரும். இதில் இரண்டு பணவிடை கருவேப்பிலை உலர்த்திப் பொடி செய்து வெருகடிப் பிரமாணம் இரண்டு நேரமும் தேனில் 40 நாள் கொள்ள சத்தி குன்மம் வலி குன்மம், எரி குன்மம், அஷ்ட குன்மம் சூலை வாய்வு, பக்க வாய்வு, நாபிச் சூலை, சருவாங்க வாய்வு, யோனிச சூலை அண்ட சூலை, யண்ட வாய்வு, காது கள்ளன், பீனிசம். 18, வகையும் நாசிகாபீடம் 6 வகையும் மண்டை சூலை கழல் வாய்வு கண்ட விப்புருதி கெந்ததாளி18 வகையும் நாருச் சிலந்தி தந்த வாய்வு யிரத்தப் பித்து யிரத்த ரோகம், உள் மாந்தை, சுரமாந்தை, கன்னேசி, குவளை, விப்புருதி, கூடு விப்புருதி யிரத்தப் புத்து, கெற்ப வாய்வு, கெற்ப புழு மலட்டுப் புழு, சகல பெரும்பாடு, எலும்புருக்கி, உள்ளுருக்கி, 12 வகையும் யோனிப் புத்து லிங்கப் புத்து அரைப் புத்து அரையாப்பு, கிறிசனம் 18 வகையும் யீளை 12-ம் எலிகடி 18-ம் சேற்றுமம் 96-ம் பித்த ரோகம் 128 வாதம் 80-ம் சன்னி வாதம் 6-ம் வாய் நாற்றம் யோனியில் நாற்றல் லிங்கத்தில் நாற்றம் அதில் வீக்கம் யோனியில் வீக்கம், கிரிகை வகைகளும் மருந்தீடும் நஞ்சு கலந்ததும்: சூனிய வஞ்சனைகளும், பூதப் பிரேதப் பிசாசுகளுள்ளதும் இவை யெல்லாந் தீரும்.

<u>வங்க செந்தூரம்:-</u>

ஒரு பலம் வெடியுப்பு யீரத்தை சட்டியிலே போட்டு வறுக்கவும். அதின் பிறகு ஆலம் வேரும் வட்டத் [illegible] துத்தி வேரும்; கண்டங் கண்டமாக நறுக்கி சிவக்க வறுக்கவும். இதுக்கு அநுபானம் இந்தச் செந்தூரத்தில் அரைப் பணவிடையும், சீனி வெருகடிப் பிரமாணம் நற்சீரகம், கூட்டிக் குழப்பி இரண்டு நேரம் இருபது நாள் கொள்ள கிறிசனம் 18-ம் கல்லடைப்பன் 18-ம் சதையடைப்பன் உட்டின ரோகம் 366 பித்தரோகம் 128-ம் அதிலுண்டான தாகங்களும், நீர்க்கடுப்பு எலும்புருக்கி12-ம் சோமரோகம் 12-ம் முகமெரிப்புக் காலெரிப்பு கை யெரிப்பு சுக்கிலப் பிரமியம் 18 வகையும் தீரும். இதிலரைப் பணவிடை யிஞ்சி சாத்தில் எட்டு நாள் கொள்ள சுரம் 32-ம் தீரும். இதிலரைப் பணவிடையும் காந்த செந்தூரத்தில் ஒரு பணவிடையும் அட்டகசம் வெருகடிப் பிரமாணம் தேனில் குழைத்துக் இரண்டு போது முப்பது நாள் கொள்ள கிருணி 6 வகையும் அதிசாரம் 12 வகையும் வயத்துக்

கடுப்பு வயத்தில் பிள்ளைப் பெத்து சீ பிளைத்தலும் கிருணியுந் தீரும். இதிலரைப் பணவிடையும் லோக செந்தூரம் ஒரு பணவிடையும், காந்த செந்தூரம் ஒரு பணவிடையும், திரிகடுகு வெருப்பி பொடி செய்து வெருகடிப் பிரமாணம் தேனில் குழப்பி இரண்டு போதும் இருபது நாள்க் கொள்ள வறச்சி காமாலை, நீர்க் காமாலை பயித்திய பாண்டு சோகை, விஷ பாகம், சோபம், மேலிளைப்பு, ஈளை இருமல் எலிகடி மந்தார காயம், சுவாச காசம், உள் மாந்தை, சுரமாந்தை இவையெல்லாந் தீரும்.

குட்டங் குறை நோவுக்குச் செந்தூரம்:-

சூரியம் பலம்.க, பசுவின் கோமியத்தில் இருபது தர முருக்கிச் சாய்த்து எடுத்து ஒரு புதுச் சட்டியில் போட்டு சிறுநீரை வேரும் கத்தாளை வேரும், கண்டங் கண்டமாக நறுக்கி வெடியுப்பு நாழி கொண்டு சிறுகச் சிறுகப் போட்டு கிண்டி போட்டு வறுக்க யிப்படி மூன்று தரம் வறுக்கச் செந்தூரமாம். உப்புப் போகக் கழுவிப் போட்டு எடுத்துக் கொள்ளவும். இதிலரைப் பணவிடை தேனில் இரண்டு நேரமும் நாற்பது நாள் கொள்ள குட்டங் குறை நோவு பெருநோவு பதினெட்டுக் குட்டமும செவ்வட்டை கடி வண்டு கடி, கா்ணுக்கடி, விஷம், செய்யான் கடி, விஷம், கபால குட்டம், பல்கடி, விஷம், சிரங்கு, சொரி யிவை எல்லாந் தீரும்.

மாத ரச வங்க செந்தூரம்:-

காரீயம் பலம்.உ, வாங்கிப் பசுவின் கோமியத்தில் பத்துத் தரம் உருக்கிச் சாய்க்கவும். ஒரு புதுச் சட்டியிலிட்டு உப்பு சிறுகச் சிறுகப் போட்டு வறுக்கவும். பிறகு அரசம் பட்டை கொண்டு வந்து சிவந்த பட்டையை சிறுகச் சிறுகக் கண்டங் கண்டமாக நறுக்கிச் சிறுகச் சறுகச் சிவக்கு மட்டும் வறுக்கவும். அதின் பிறகு எடுத்துச் சீலையில் பொட்டணமாகக் கட்டி உலத்தி உப்புப் போக்கி எடுத்துக் கொள்ளவும். இதக் கறுபானம் இந்தச் செந்தூரத்தி லரைப் பணவிடையும் அமுரத சர்க்கரை வெருகடிப் பிரமாணம் ஆவாரைப் பஞ்சாங்கப் பொடி அந்த மருவாதிக்குச் சரி கொண்டு சீனியும் கூட்டி தேனில்க் குழைத்து இரகு போத நாற்பது நாள் கொள்ள நீரளிவு 21-ம் கல்லடைப்பு 18-ம் இந்திர கண்டி 5-ம் சதையடைப்பனும் சோமரோகம் 12-ம் பித்த நோய் சோ்மரோகம் 12, பித்த கோபம் 128-ம் நீர்க் கடுப்பும் மூத்திரக் பாளையும் மூத்திர மண்டியும் உள்ளுருக்கியும் எலும்புருக்கியும் தண்ணீர்த் தாகம் உளலைச் சுரம் உடம்பெரிப்பு வயத்திற் கொதிப்பும் புழு வெரிப்பும் புழு விஷச் சுரமும் இது வகை யெல்லாந் தீரும். இதிலரைப் பணவிடை இரத செந்தூரம் ஒரு பணவிடையும் லோக செந்தூரம் ஒரு பணவிடையும் சிங்காரச் சூரணம் வெருகடிப் பிரமாணம் காந்த செந்தூரத்தில் பணவிடையும் வெருகடிப் பிரமாணம் ***** தேனில் குழைத்து இரகு போது நாற்பது நாள்க் கொள்ள ஈளை 12-ம் இருமல் 16-ம் எலிகடி 18, உள் மாந்தை சுரமாந்தை சேற்றும் 96-ம் இதிலுண்டான வியாதிகளெல்லாந் தீரும்.

மகா லோக செந்தூரம்:-

நல்வல் பட்டை துவைத்து தண்ணீரில் தெளித்து பதக்குச் சாறு பிழிந்து பெரிய கடப்பாரை இரும்புகளை சிவக்கக் காய்ச்சி இந்த சாரகத்தை ஒழுக விட்டு அந்த சாற்றிலே யிருமாறு மட்டும் காய்ச்சி தோக்க விழுந்த யிரும்பெல்லாம் எடுத்து அம்மியிலே போட்டு நல்வல்பட்டைச் சாறு விட்டரைக்கவும். ஒரு சாமமரைத்து தகடாகப் பிடித்து ஒரு சட்டியில் வைத்து நல்வவல் பட்டை துவைத்த பொடியும் அதின் மேலே வைத்து முழங்கால் மட்டும் எருவடிக்கி அதின் மேலே சட்டியை வைத்து நல்வல் பட்டை துவைத்து பொடியும் அதின் மேலே வைத்து சட்டி கொண்டு மூடி அதின் மார்பளவு உயர மெருவடிக்கி உமிப் பொடியும் எருப் பொடியும் அதின் மேலே போட்டுத் தீப் போடவும். சீயாற விட்டு மறுநாள் எடுக்கவும். அதை நல்வல் பட்டை சாறு விட்டரைத்து அப்படியே தகடு பிடித்து சட்டியில் வைத்து நல்வவல் பட்டை துவைத்த பொடியும் அதின் மேலே வைத்து ஒரு சட்டி கொண்டு மூடி முழங்கால் மட்டும் எருவடிக்கி அதின் மேலே வைத்து அதின் மேலே மார்வு உயரத்துக்கு எருவடிக்கி உமிப் பொடியும் எருப்பொடியும் அதின் மேலே போட்டு தீப் போடவும். மறுநாள் எடுக்கவும். அந்தச் செந்தூரத்தை நல்வல் பட்டைச் சாறு விட்டரைத்து இந்தப் படி பத்துப் புடம் போடவும். அதின் பிறகு கையாந்தகரைச் சாறு விட்டரைத்து பத்துப் புடம் போடவும். பொடுதலைச் சாறு விட்டரைத்து பத்து புடம் போடவும். மாதளஞ் சாறு விட்டரைத்து பத்து புடம் போடவும். ஆக அறுபது புடமிடவும்.

காந்த செந்தூரம்:-

ஊசிக் காந்தம் பலம்.100, ஒரு பானையில் போட்டு அதிலே காணச் சாறு பதக்கு விட்டு வாயைச் சட்டி கொண்டு மூடி வேக வைக்கவும். சாறு வற்றினதின் பிறகு காந்தத்தை யெடுத்து சோணிய யிட்டாகிலும் வைக்கோலாகிலும் சுருட்டிக் கடப்பாரை பாகிலும் உலக்கை கொண்டாகிலு பிடித்து துளாக்கி சீலை வடி கொண்டு நல்வவல் பட்டைச் சாறு கொண்டு விட்டரைத்து தகடாகப் பிடித்து ஒரு சட்டியிலே வைத்து மேல் சட்டி கொண்டு மூடி முழங்காலுசர மெரு வடிக்கி அதின் மேலே சட்டியை வைத்து அதின் மேலே மார்பளவு உயரம் எருவடிக்கி அதின் மேலே பொடி ஒரு உரயம் போட்டு தீப் போடவும். வெந்ததின் பிறகு செந்தூரத்தை எடுத்து நல்வல் பட்டைச் சாறு விட்டரைத்து முந்தின பிரகாரமே சாறு விட்டரைத்து பத்துப் புடம் போடவும். யிப்படி முப்பது புடம் போடவும். செருப்படிச் சாறு விட்டு முப்பது புடம் யிடவும். இப்படி நூற்றிருபது புடமிடவும்.

இரண்டு மெடுத்து வெவ்வேறே வைத்துக் கொள்ளவும். இதற்கு அநுபானம் லோக செந்தூரத்தில் இரண்டு பணவிடையும் காந்த செந்தூரத்தில் ஒரு பணவிடையும், திரிகடுகு வெதுப்பிப் பொடி செய்து இரண்டு போதும் வெருகடிப் பிரமாணம் நாற்பது நாள் கொள்ளவும். வறட்சி காமாலை, நீர்க் காமாலை, ஊது காமாலை, பாண்டு சோகை, யீளை யிருமல், எலி கடி, வாய்வு 26-ம், குன்மம் 16-ம், கிரணி ஆறு வகையும் அதிசாரம் 12-ம் சோமரோகம் 12-ம் சேற்றுமம் 96-ம் தீரும். லோக செந்தூரம் ஒரு பணவிடையும் கிருங்காதி சூரணம் ஒரு வெருகடிப் பிரமாணம் தேனில் குழைத்து இரண்டு போது நாற்பது நாள் கொள்ள வாதம் 80-ம் பித்தம் 128-ம் அதிலுண்டான வியாதியுந் தீரும். லோக செந்தூரத்தில் இரண்டு பணவிடை ஆவரந் தயிலத்தில் நாற்பது நாள் கொள்ள நீரளிவு தீரும்.

பஞ்ச லோக வைப்பு:-

அரப்பொடி பலம்.12, நெல்லிக்காய் கெந்தகம் பலம்.க, வெங்காரம் பலம்8 காந்தம் பலம்.7, இரசம் பலம்.5, யிந்துப்பு பலம். இவை சேரக் கத்தாழை சாறு விட்டரைத்து அறுபது நாழிகை யரைத்து அடையாக பிடித்து ஒரு சட்டியில் வைத்து நிரம்பக் கத்தாழைச் சோறிட்டு ஒரு சட்டி கொண்டு மூடி யேழு சீலை மண் செய்து அடுப்பில் வைத்துக் காடாக்கினியாக நாலு நாளெரித்து தீப்பிரித்து ஐந்து நாள் குளிர ஆறவிட்டு செந்தூரம் மெடுத்துக் கொள்ளவும். இதற் கநுபான மிதிலொரு பணவிடையும் திரிகடுகு, திரிபலையும் வெதுப்பி பொடி செய்து வெருகடிப் பிரமாணம் தேனிலு மிஞ்சி சாற்றிலும் இரண்டு போது நாற்பது நாள் கொள்ளச் சத்தி குன்மம், வலி குன்மம் எரி குன்மம், எட்டும் பயித்திய குன்மம் 16-ம் வாய்வு 21 வாதம் 80-ம், பித்தம் கோபம் 128-ம் சேற்றும கோபம் 96-ம் கிரந்தி, உட்ம்பு வேர்வை எல்லாந் தீரும். ஈளை, இரும்விளைப்பு, எலிகடி, அரப்பு, கசங்காமாலை, பாண்டு ரோகம், சோகை, வறக்காமாலை, நீர்க் காமாலை; விஷபாகம், சோபன் சூலை கடுப்பு, கரைப்பன், கிரந்தி இவை எல்லாந் தீரும். மற்றுண்டான வியாதிக்கு முறையநுபானம் பார்த்துக் கண்டு கொள்ளவும்.

லோக அக்கினி குமார செந்தூரம்:-

அரப்பொடி பலம்.க, செம்பு பொடி பலம்.க, வெங்கலப் பொடி பலம்.க பித்தளைப் பொடி பலம்.க, அரிதாரப் பொடி பலம்.க, சாதிலிங்கம் பலம்.க, நெல்லிக்காய் கெந்தகம் பலம்.க, ஊசிக் காந்தம் பலம்.க, வெங்காரம் பலம்.க, யிரதம் பலம்.க, இவை சேரக் கத்தாழைச் சாறு விட்டு மூன்று நாளரைத்து அடையாக பிடித்துக் கத்தாழைச் சோறும், நீர் மேல் நெருப்பும், கொடி வேலி வேருந் தூவைத்து சட்டி நிரம்ப விட்டு மறுசட்டி கொண்டு மூடி சட்டி வாயை யேழு சீலை மண் செய்து அடுப்பிலேத்தி யெரிக்கவும். மூன்று நாளெரித்து நாலா நாள் தீயைப் பிரித்து செந்தூரம் யெடுத்துக் கொள்ளவும். இதில் பணவிடையும், திப்பிலி பொடி வெருகடிப் பிரமாணம் தேனில் குழைத்துக் கொள்ள தலைவலி, மூர்ச்சை, முசல கண்டன், மூர்ச்சை சன்னி மூர்ச்சை வாத மூர்ச்சை வாத மிவை யெல்லாந் தீரும்.

லோக செந்தூரக் குளிகை:-

அரப்பொடி பலம்.க, வெங்கலப் பொடி பலம்.½, பித்தளைப் பொடி பலம்.½ யிரதம் பலம்.க, சாதிலிங்கம் பலம்.க, தாம்பூரம் பொடி பலம்.½, நெல்லிக்காய் கெந்தகம் பலம்.¼, ஊசிக் காந்தம் பலம்.க, வெண்காரம் பலம்.க, வெள்ளி பலம்.உ, பொன் பலம்.க, யிவை சேரக் கத்தாழைச் சாறு விட்டரைத்து மறுநாள் கொடிவேலி வேரும், ஆயில் பட்டை கண்ணீரும் புளிந்து ஒரு நாளரைத்து மறுநாள் புன் முருங்கைச் சாறு விட்டரைத்து ஒரு குடுவைக் கலசத்தில் முக்கால் கலசம் விட்டு கலச வாயைச் சீலை கொண்டு மூடி கலச மட்கலும் ஏழு சீலை மண் செய்து முழங்கால் மட்டும் எருவடுக்கி மேலே கலசத்தை வைத்து அது மேலே மார்பளவு உயரம் எருவடுக்கி மேலே பொடி எருப்போட்டு உமியும் போட்டு தீப் போடவும். மறுநாள் தீப் பிரித்து பார்க்கச் செந்தூரம் சிவந்தாதால் எடுத்துக் கொள்ளவும். சிவக்காமலிருந்தால் மறுபடி புடம் போட்டுக் கொள்ளவும். பச்சை நாவி பலம்.க, கோமியத்திலூறப் போட்டு மறு நாளும் ஊறப் போட்டு திப்பிலி பலம்.க, திப்பிலி மூலம் பலம்.க, இதுவும் செந்தூரமுங் கூட்டி முலைப்பால் விட்டு நன்றாய் நாள அரைத்து ஒரு பணவிடை பிரமாணம் உருண்டை பண்ணி நிழல் உலர்த்தலாக உலர்த்தி வைத்துக் கொள்ளவும். இதற் கநுபானம் இந்தச் செந்தூரத்தில் ஒரு பணவிடையும் திரிகடுகு வெதுப்பி பொடி செய்து வெருகடிப் பிரமாணம் தேனும் இஞ்சி சாறும் விட்டு இரண்டு நேரம் இருபது நாள் கொள்ளச் சன்னி 18-ம் வாதம் 80-ம் வாய்வு 26-ம் சத்தி குன்மம் வலி குன்மம் எரி குன்மம், புலம்பல், பைத்திய குன்மம் 16-ம் குடல் செளிகை வாய்வு முக வாதம், மண்டை சூலை, பீனிசம் நாசிகாபீடம் கபால வாய்வும் தலை வலியும் தலை யிடியும் பிடரி வாதமும் செவி நோவும், கெந்த தாளியும் தொண்டை நோவும் நெஞ்சில் நோவும் முசல் கண்டன் மூட்டையும் சன்னி மூர்ச்சை அண்ட வாதம்; கால் வாதம், ஆனந்த வாய்வு, அதிர வட்டி குடல், வாதம் பித்த சன்னி வலிப்பு போதக வாய்வு, குதிரை வாதம், தமரக வாய்வு முழங்கால் முட்டி முழங்கால், கரப்பான், நடுக்கு வாதம், வாயில் நொருப்பு தள்ளுறது சரீரத்தில் சிலந்திகள் கண்ணில் வாதம் ரண மெடுத்து மண் குடோரம் சூலை 17-ம் தீரும். இந்தச் செந்தூரத்திலொரு மாத்திரையும் வெள்ள வெங்காயத் தயிலத்தில் கொள்ள கிறுதி வாதம் நிற்கும். இதிலொரு மாத்திரையும், சீனி வெருகடிப் பிரமாணம் தேனில் பத்து நாள்க் கொள்ள பிரமியம் 18-ம் கல்லடைப்பன் 18-ம் சதையடைப்பன் 18-ம் யிந்திர கண்டி 5-ம் மந்த வாய்வு பித்தம் 128-ம் உட்டின ரோகம் 232-ம் தீரும். இந்த செந்தூரத்திலொரு மாத்திரையும் கள்ளி வடகத்தில் பத்து நாள்க் கொள்ள வயத்தில் வியாதி 60-ம்

வாய்வுத் திரட்சி 32ம். மகோதரம், பெருவயறு விஊபாகம், சோகை காமாலை பாண்டு சோகை யிவை மற்றுண்டான வியாதி எல்லாம் தீரும் என்றறியவும்.

வங்கார சஞ்சீவி அக்கினி குமார செந்தூரக் குளிகை:-

அரப்பொடி பலம்.க, உருக்குப் பொடி பலம்.க, செம்பு அரப்பொடி பலம்.க, பித்தளைப் பொடி பலம்.க, வெங்கலப் பொடி பலம்.க, ஊசிக் காந்தம் பலம்.உ, யிரதம் பலம்.க, கெந்தகம் பலம்.6, வெங்காரம் பலம்.க, மனோசிலை பலம்.க, திப்பிலி பலம்.க இவை யெல்லாங் கத்தாளஞ் சாறு விட்டு மூன்று நாளரைத்து ஒரு சட்டியிலிட்டு மேல் சட்டி கொண்டு மூடி ஏழு சீலை மண் செய்து அடுப்பில் வைத்து மூன்று நாள் தீ யெரிக்கவும். தீயற விட்டு செந்தூரத்தை யெடுத்துக் கொண்டு நாவி பலம்.க, பசுவின் கோமியத்திலூறப் போட்டு மறுநாள் எடுத்து திப்பிலி பலம்.க, திப்பிலி மூலம் பலம்.க, வெங்காயத் தலியம் விட்டு அரைத்து அதிலே செந்தூர மொக்கப் பொடி செய்து போட்டு அரைப் பணவிடை மாத்திரம் உருண்டை பண்ணிக் கொள்ளவும். இதக் கநுபானம் யிதிலரைப் பணவிடை மாத்திரையும் வெங்காரத்தில் மூன்று நாட் கொள்ள சன்னி 18-ம் தீரும்.
இந்தச் செந்தூரத்தில் அரைப் பணவிடை மாவிலிங்கஞ் சாத்தில் பத்து நாட் கொள்ள வாதம் 80-ம் புன் குடோரத்து சூலை 17-ம் வாய்வு 26-ம் குட்டம் 18-ம் குறை நோவு செவ்வட்டை கடி, வண்டு கடி, கடி விஊடம், காணுக் கடி, கபால குட்டம், கால் கடி, விஊடம், சிரங்கு, சொறி படர் தாமரை, வெங்குட்டங் கருங்குட்டம், செங்குட்டம், விரிகுட்டம், கபால கடி விஊடம், கரை கரை மேலிற் புன் யிவை யெல்லாந் தீரும். இதில் அரைப் பணவிடை, கும்மட் டிக் காய்ச் சாற்றில் ஒன்று விட்டொரு நாள் 10 நாள் கொள்ள வயத்தில் வியாதி 60-ம் வாய்வு திரட்சை ~~71~~ 32-ம் குன்மம் 16-ம் வாய்வு 26-ம் விப் புருதி கெற்ப விப்புருதி உண்டானதும் மகோதரம், பெரு வயறு, பீலிகை கீழ் வயத்தில் வீக்கம் மற்று முண்டான வியாதியெல்லாந் தீரும். முந்தின அநுபானம் பார்த்திட்டு வரவும்.

விசநாதன் அக்கினி குமார செந்தூரம்:-

இரதம் பலம்.10, உருக்கு அரப்பொடி பலம்.10, ஊசிக் காந்தம் பலம்.10, கெந்தகம் பலம்.10, மனோசிலை பலம்.10, செம்பு பொடி பலம்.10 சாதிலிங்கம் பலம்.10, பெருங்காயம் பலம்.5, வெள்ளி பலம்.க, யிவை சேரக் கற்றாளஞ் சாறு விட்டரைத்து குப்பி யரை மட்டும் புகட்டி வளப்பக் கல்லுக் கொண்ட டைத்து ஒட்டி யடுப்பு போட்டு அதிலே ஒரு தாளியைப் பிதைத்து அந்தத் தாளித் தாளில் கத்திரி போலே துவார யிட்டு அதின் மேலே ஒரு ஒடு வைத்து அதின் மேலே நாலு விரல் கனம் மணலிட்டு அதின் மேலே குப்பி வாயை வைத்து குப்பிக்குள் நிரம்ப மணலிட்டு ஒரு சட்டி கொண்டு மூடி அடுப்பில் வைத்து தீபாக்கினி ஒரு நாளும் கமலாக்கினி இரண்டு நாளும் காடாக்கினி இரண்டு சாமமுந் தீ யெரித்து நாலா நாள் தீ யெரித்துக் குளிர ஆற விட்டு செந்தூரத்தை எடுத்துக் கொண்டு திப்பிலி திப்பிலி மூலம் பலம்.$\frac{1}{4}$, கடுகுரோகணி பலம்.$\frac{1}{4}$, சாதிபத்திரி பலம்.$\frac{1}{4}$, கோழி முட்டை தயிலம் விட்டு நன்றாய் அரைத்துப் பிறகு செந்தூரம் போட்டு நன்றாய் மாள அரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி ஒரு உருண்டை வெள் வெங்காயத் தயிலத்தில் மூன்று நாள் குடிக்க சன்னி பதினெட்டுந் தீரும். யிதிலொரு பணவிடையும் திரிகடுகு வெருப்பிப் பொடி செய்து வெருகடிப் பிரமாணம் தேனில் பத்து நாள் கொள்ள வாதம் 18-ம் சேற்றுமம் 96-ம், பித்தம் 128-ம், உட்டின ரோகம் 326-ம் குட்டம் 18-ம் குறை நோவு கடி விசம் செவ்வட்டை கடி இது முதலுண்டான வியாதி யெல்லாந் தீரும் என்றறியும்.

குமார சுப்பிரமணி யாக்கினி செந்தூரம்:-

அரப் பொடி கெந்தகம், ஊசிக் காந்தம், வெங்காரம், சாதிலிங்கம் ஆக ஐந்து மருந்தும் வகைக்கு பத்து களஞ்சு கூட்டி கற்றாளஞ் சாறு விட்டு நாலு சாம மரைத்து பொடி பண்ணி கலசத்தில் வைத்து செம்புக் கிண்ணி கொண்டு மூடி வெயிலிலே வைக்கப் புகை யெழுந்து வேகும். மறு நாளெடுத்து கற்றாளஞ் சாறு விட்டு நாலு நா ளரைத்து மறுபடியுங் கிண்ணி கொண்டு மூடிக் கிண்ணியிலே வைக்கச் சிறு புகையா லெழுந்து வேம். மூன்று நாளிந்தப் படி யரைத்து அப்படி வைக்க மிகு தீயா யெழுந்து வேம். இந்தச் செந்தூரத்தை யெடுத்துக் கொள்ளவும். இதுக்கு அநுபானம் இந்தச் செந்தூரத்தில் ஒரு பணவிடையும், திரிகடுகு வெருப்பி பொடி செய்து வெருகடிப் பிரமாணம் இரண்டு பேரும் தேனிற் பத்து நாள்க் கொள்ளச் சன்னி 18-ம் வாதம் 80-ம் உட்டின ரோகம் 326-ம் சத்தி குன்மம் எரி குன்மம், வலி குன்மம், சூதக வாய்வு, பெரு விரலிலே நின்று உச்சந் தலை மட்டும் மூறிசித்துப் போடுகிற வாய்வு சன்னி மூர்ச்சை பித்த மூர்ச்சை சேற்றும மூர்ச்சை முசல கண்டன் மூர்ச்சை யெல்லாந் தீரும். முன்னநு பானத்தின் படியே பார்த்திடவும்.

லோக செந்தூரம்:-

லோக செந்தூரம் பணவிடை.10, யிரத செந்தூரம் 10 பலம், காந்த செந்தூரம் பலம்.10, வங்க செந்தூரம் 5 பலம். சாதிலிங்கம் 5 பலம், இரதம் 5 பலம், தாம்பிர பலம்.5, பச்சை நாவி பலம்.10, அரிதார செந்தூரம் பலம்.10, யிவை யெல்லாங் குமரிச் சாறு விட்டு நாலு சாமமரைத்து கடலைப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலத்தலா உலத்திக் கொள்ளவும். இதுக் கநுபானம் வெங்காயத் தயிலத்தில் மூன்று நாளிடச் சன்னி 18-ம் தீரும். இதிலொரு பணவிடை

முருங்கைச் சாற்றில் பத்து நாள்க் கொள்ள வாதம் 80-ம் தீரும். இந்த உருண்டை நச்சுபகமும் சர்க்கரையும் வெருகடிப் பிரமாணம் தேனில் குழைத்து இரண்டு போது இருபது நாள் கொள்ள பித்தம் 128-ம் உட்டின ரோகம் 328-ம் தீரும். இந்த உருண்டையைக் கண்டங்கத்திரிச் சாற்றில் இருபது நாள் கொள்ள சேற்பனம் 96-ம தீரும். மற்று முண்டான வியாதிக்கும் முன்னனுபானத்தின் படி பார்த்திடவும். கிட்டின அப்பிரக--செந்தூரம்

<u>கிட்டின அப்பிரக செந்தூரம்:-</u>

கிட்டின அப்பிரகம் யிதளிதளாக யெடுத்து யிதுக்குச் சோதினை மண் வெட்டியைக் காயப் போட்டு அதிலே போட்டு புகைந்தாலும் உருகிலும் புத்திச் சாவு மாகாது. அந்த மண் வெட்டியிலே மேலே போட்டாப் போலே கிடந்ததாகில் ஆம். அந்த அப்பிறகத்தைச் சுத்தி பண்ணுகிற வகை. செவ்விள நீர் நனையப் போட்டு மூறு நாளெடுத்து நன்றாய் பிசைந்து கொள்ளவும். அப்பிறகத்தை மூன்று நாள் மோரில் நனையப் போட்டு எடுத்து மோருடன் பிசைந்து பரு நெல்லுச் சுனையர்ன நெல்லெடுத்து ஒக்கப் போட்டு ஒரு கோடி சீலையில் கட்டிக் கோணிய பட்டிலே தேய்த்து காடித் தெளிவிலே பிசைந்து வெண்ணெ போலே பிறப்படும். இதை ஊற வைத்து அந்த அப்பிரகம் கல்லு நெல்லும் போக்கித் திரண்ட தெல்லாம் ஊற வைத்து எடுத்து தெளிந்த தண்ணீரை வைத்து வடித்துப் போட்டு அடியிலே உறைந்ததை எடுத்துக் கொண்டு திரும்பச் செவ்விள நீரிலே ஊற வைத்து மூன்று நாலுற விட்டு நாலா நாளெடுத்துச் செவ்விள நீர் விட்டரைத்து ஆலம் பழுப்பு நாவிலைக் கல்லை தைத்து யிப்படி நாலு கல்லை ஒன்று மேலே ஒன்று அடுக்கி வைத்து அதின் மேலே அப்பிறகத்தை வைத்து அதின் மேலு மந்தப் படி கல்லை தைச்சு மூடிச் சீலை மண் செய்து ஒரு ஓட்டில் வைத்து மேலே ஒரு ஒடு கொண்டு மூடி முளங்காலு சபம் எருவடிக்கி அதின் மேலே வைத்து அதின் மேல் அரையளவு உயரம் எருவடிக்கித் தீப் போடவும். மற்று நாளாற விட்டு எடுத்து மறுபடி செவ்விள நீர் விட்டரைத்து யிப்படிப் பத்துப் புடம் போடவும். கையாந்தகரைச் சாற்றிலரைத்து பத்துப் புடம் போடவும். கத்தாளஞ் சாறு விட்டரைத்துப் பத்துப் புடம் போடவும். செருப்படிச் சாறு விட்டரைத்துப் பத்து புடமிடவும். பொன்னாங்காணிச் சாற்றில் பத்துப் புடமிடவும். குளி தாமரைச் சாத்தில் பத்து புடமிடவும். நொச்சித் தாமரைச் சாத்திலரைத்துப் பத்து புடமிடவும். ஒரிலைத் தாமரைச் சாற்றிலரைத்து பத்து புடமிடவும். பசுவின் பாலிலரைத்துப் பத்துப் புடமிடவும். சிறுகீரைச் சாத்தில் பத்துப் புடமிடவும். ஆக இவை சேர 120 புடம் போட்டு எடுத்து சாயவேர் பலம் பத்து யிடித்துப் பானையிலிட்டு பதக்குத் தண்ணீர் விட்டு அப்பிறகத்தை தொளாந்திரமாக கட்டி வேக வைத்துக் கொள்ளவும். அதின் பிறகு பொன் மெழுகு கொண்டு வந்து யிடித்து ஒரு பானையில் போட்டுக் குனி தண்ணீர் விட்டு தொளாந்திரமாகக் கட்டி வேக வைத்து எடுத்து அப்பிறகத்தைச் செம்பருத்தம் பூச் சாறு விட்டு யெலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்து எலுமிச்சம் பழச் சாற்றுடனே செம்பருத்தம் பூச் சாறு விட்டு அரைத்துச் சூரிய புடமிடவும். பிறகு எடுத்துப் பார்த்தால் முருக்கம் பூப்போலே இருக்கும். யிந்தச் செந்தூரத்தில் ஒரு மாவும் யிஞ்சி சாத்தில் கொடுக்கப் பைத்தியந் தீரும். இந்தச் செந்தூரத்தில் ஒரு மாவும் சீனியுந் தேனுங் கூட்டி மூன்று நாள் கொடுக்க வாதம், வாய்வு தீரும். இதில் ஒரு மாவும் கோளி யிரத்தத்தில் கொடுக்க முசல் கண்டந் தீரும். இந்தச் செந்தூரத்தில் ஒரு மாவும் கொடுப்பைச் சாற்றில் கொடுக்க உடனே ரோகந் தீரும். இந்த செந்தூரத்தில் ஒரு மாவும் சீந்தி தண்ணீரில் கொடுக்க மூன்று நாளையில் பிரமியந் தீரும். இந்தச் செந்தூரத்தில் ஒரு மாவும் கோவைக் கிழங்குச் சாற்றில் கொடுக்கத் தாது விர்த்தியாகும். அழகு பிறக்கும். இதில் ஒரு மாவும் கீழ்காய் நெல்லிச் சாற்றில் கொடுக்க வெள்ளையும், உதிர வகையுந் தீரும். இதிலொரு மாவும் ஆவாரந் தயிலத்தில் கொடுக்க நீரளிவு தீரும். இதிலொரு பணவிடை தொம்மட்டிக் குளம்பில் ஒன்று விட்டொரு நாள் பத்து நாள் கொள்ள வயத்தில் வியாதி 60 தீரும். மகோதரம், பெருவயறு, காமாலை விஷபாகம் இவை எல்லாந் தீரும். இதிலொரு பணவிடை குறுந் தொட்டிச் சாத்தில் மூன்று நாள் கொடுக்கச் சுரந் தீரும். இதிலொரு பணவிடை கற்பூரச் சூரணத்தில் பத்து நாள் கொடுக்க ஈளை, இருமல், மந்தார காசம், எலிகடி, காயசுவாதம், மேலிளைப்பு இவை தீரும். இதிலொரு பணவிடை முருங்கைப் பட்டை தண்ணீரில் கொடுக்க வாதம் 80 குன்மம் 16-ம் வாய்வு 26ம தீரும். இதிலொரு பணவிடை முருங்கைப் பட்டை தண்ணீரில் கொடுக்க வாதம் 80, குன்மம் 16, வாய்வு 26-ம் தீரும். இதிலொரு பணவிடை யெலாதி சூரணத்தில் 40 நாள் கொடுக்க பித்தம் 128-ம் தீரும். உட்டின ரோகம் 36-ம் தீரும் இதிலொரு பணவிடை ஆடாதோடை நெய்யாவதல், திப்பிலாதி, கிருதத்திலாகுதல் கொடுக்கச் சிலேற்பனத்தி லெழுந்த வியாதியுந் தீரும். உட்டின*ரோகம்*தீ*ர்*தீரும்* முன்னனுபானத்தின் படியே பார்த்திடவும்..

<u>இரத அப்பிரக செந்தூரம்:-</u>

அப்பிரகம் சுத்தி பண்ணினது பலம் 10, யிரதம் பலம் 3, கெந்தம் பலம் 3, இம் மூன்றும் அரக்காம் பால் சாறு விட்டரைத்து அடையாகப் பிடித்து ஒரு முட்டியிலிட்டு அது நிரம்ப அரக்காம்பலிட்டு ஒரு சட்டி கொண்டு மூடி சட்டி வாயளவு சீலை மண் செய்து முழங்கால உயர எருவடிக்கி அதின் மேலே வைத்து அதின் மேலே அரையளவு சபமெரு வடிக்கி அதின் மேலே பொடி எருப்போட்டு மேலே உமியும் போட்டு தீயிடவும். மூன்று நாளாற விட்டு நாலா நாள் எடுத்து கற்றாழஞ் சாறு விட்டு ஒரு நாளரைத்து அடையாகப் பிடித்து ஒரு சட்டி கொண்டு மூடி எழு சீலை மண் செய்து அடுப்பில் வைத்து மூன்று நாளெரித்து

நாலா நாளெடுத்துக் கற்றாளஞ் சாறு விட்டு ஒரு சாமமரைத்து எடுத்துக் கொள்ளவும். இதுக்கு அநுபானம் இதிலொரு பணவிடையும் திரிகடுகு வெதுப்பி பொடி செய்து வெருகடிப் பிரமாணம் தேனில் குழைத்துப் பத்து நாள் கொள்ள வாதம் 80-ம் தீரும். இதிலொரு பணவிடையும், திப்பிலி வெதுப்பி பொடி செய்து வெருகடிப் பிரமாணம் பத்து நாள் தேனில் கொள்ள ஈளை இருமல், எலிகடி, மந்தார காசம், காய சுவாசம், காய செற்குமம் 96-ம் தீரும். இதிலொரு பணவிடையும், வேப்பெண்ணையும் எருமை மூத்திரமும் முருங்கைப் பட்டைச் சாறும் பத்து நாள் கொள்ள பித்த காசமும் உள் மாந்தையும், பித்தத்தி லெழுந்த வியாதி 128 தீரும். இதிலொரு பணவிடையும் தேனில் பத்து நாள்க் கொள்ள சூலை வாய்வு, தீரும். இதிலொரு பணவிடையும் பனை வெல்லமும் பத்து நாள் கொள்ளக். கடி விஷங்கள் தீரும்.

__அப்பிரக பற்பம்:-__ 10.4.64.

கிட்டின அப்பிரகம் கொண்டு வந்து காடியிலே நனைய வைத்து மறுநாள் தனிக்களாக எடுத்துக் கொண்டு மொருக்கத்திலே பரு நெல்லும் அப்பிரகமும் நனையப் போட்டுக் கோடிச் சீலையில் பொட்டணமாகக் கட்டிக் கோணிய பட்டிலே தேய்க்கவும். அப்பிரகம் வெண்ணை போலே மிதக்கும். அந்தக் கல்லும் நெல்லுங் கூடக்கப் போட்டு திரண்ட வெண்ணை போலே யிருந்தால் அது வெல்லா மெடுத்துக் காடியில் நனையப் போட்டு தெளிந்த தண்ணீரைத்துப் போட்டு அடியில் பண்டியாக யிருக்கிறதை எடுத்துக் கொண்டு கற்றாளஞ் சாறு விட்டரைத்துப் பின்பு நவ்வல் பட்டைச் சாறு விட்டரைத்து கெந்தகம் பலம்:க, ரசம் பலம்.க, சுத்தி பண்ணிக் கொண்டு முருங்கையிலைச் சாறு விட்டு இரண்டு சாமமரைத்து பின்பு அரப்பொடி யொக்கப் போட்டரைத்து ஊசிக் காந்தம் பலம்.க, ஒக்கப் போட்டரைத்து அடையாகப் பிடித்து உலர்த்தி ஒரு சட்டியில் வைத்து சட்டி நிரம்ப நவ்வல் பட்டை யிடித்திட்டு ஒரு சட்டி கொண்டு மூடி சட்டி வாய் ஏழு சீலை மண் செய்து அடுப்பில் வைத்து மூன்று நாள் தீயெரித்து நாலா நாள் கற்றாளஞ் சாறு விட்டரைத்து அடை யாகப் பிடித்து ஒரு சட்டியிலிட்டு அது நிரம்பக் கற்றாளஞ் சாறு விட்டு ஒரு சட்டி கொண்டு மூடி சட்டி வாயை ஏழு சீலை மண் செய்து முழங்கால் மட்டும் ஏழு சீலை மண் எருவடுக்கி கெசபுடம் இட்டு இப்படி இரண்டு புடமிட்டதின் பிறகு. செந்தூரத்தில் ஒரு பணவிடையும் திரிகடுகு வெதுப்பி பொடி செய்து வெருகடிப் பிரமாணம் தேனில் இரண்டு நேரமும் 40 நாள் கொள்ள இருமல், எலி கடி, மந்தார காசம், காய சுவாசம், சுவாச காசம், எலிகடி 18-ம் செற்குமத் திலெடுத்த வியாதி 96-ம் பித்தத்திலெடுத்த வியாதி 128-ம் வாதம் 80-ம் அதிலுண்டான வியாதியும் சத்தி குன்ம மெரி குன்மம், வலி குன்மம் 16-ம் வாய்வு 26-ம் 26-ம் தீரும். இதில் இரண்டு பணவிடை கையாந்தகரைச் சாற்றில் இரண்டு போதும் இருபது நாட் கொள்ள காமாலை, சோகை, பாண்டு, விஷபாகம், சோபம், ஊது காமாலை, வறட்சி, காமாலை இது வெல்லாந் தீரும். இதிலொரு பணவிடை கொம்மட்டிக்காய் குளம்பில் ஒன்று விட்டொரு நாள் பத்து நாள் கொள்ள பயித்தில் வியாதி 60-ம் தீரும். அருவை கவுசி நராமை நர்ப்புவை நீர்க் கோர்வை, அட்ட பீலிகை குன்மம், குருவை பெரு வயறு மகோதரம் இவை யெல்லாந் தீரும்.

__மருந்து:-__

மாணிக்கம் பலம்.5, தங்கம் பலம்.20, ரசம் பலம்.உ, செந்தகம் பலம்.உ, மனோசிலை பலம்.க, அரிதாரம் பலம்.ஊ, ஊசிக் காந்தம் பலம்.க, வெங்காரம் பலம்.க, திப்பிலி பலம்.க, பச்சை நாவி பலம்.க, இவை சேர முருங்கையிலைச் சாறு விட்டு ஒரு சாமமரைத்து முள்ளிச் சாறு விட்டு இரண்டு நாளரைத்து பொடி பண்ணி செங்கா சலக் குப்பியை யேழு சீலை மண் செய்து உலர விட்டு குப்பியில் பொடியிட்டு குப்பி வாயை அடைப்பக் கல்லுக் கொண்டடைத்து விநாயக பூசை பண்ணி ஒட்டி மடுப்பு போட்டு ஒரு தாளியைப் புதைத்து அதிலே நாலு விரல் கனம் மண்ணிட்டு குப்பியை வைத்து குப்பி கூட முட்ட மணலிட்டு தீபாக்கினி ஒரு சாமம் கமலாக்கினி இரண்டு சாமம் காடாக்கினி யிருபத்தொரு சாமம் எரியிட்டு ஐந்தா நாள் தீ பிரித்து வயிரவ பூசை பண்ணி செந்தூரத்தை எடுத்துக் கொண்டு இதுக் கநுபானம் யிதிலொரு பணவிடை வெள் வெங்காயத் தயிலத்தில் பத்து நாள் கொள்ள சன்னி 18-ம் தீரும். இதிலொரு பணவிடையும் திரிகடுகு வெதுப்பிப் பொடி செய்து வெருகடி பிரமாணம் தேனில் இரண்டு நேரமும் கொள்ள வாதம் 80-ம் செற்குமம் 96-ம், பித்தம் 128-ம் குன்மம் 16-ம் வாய்வு 26-ம் சத்தி குன்மம் யிவை யெல்லாந் தீரும். யிதிலொரு பணவிடையும் சாதிக்காயும், சாதிப்பத்திரியும், கிராம்பு, குருசாணி ஓமம், அதிவிடயம், வெதுப்பி பொடி செய்து வெருகடிப் பிரமாணம் தேனில் குழைத்து இரண்டு நேரமும் 20 நாட் கொள்ள கிருணி 6-ம், அதிசாரம் 12-ம் பயித்திரைச்சல் வயத்து முறுக்கு இவை யெல்லாந் தீரும். முன் செந்தூரத்தின் அநுபானத்தின் படி நடக்கவும்.

__விஷந் தணு பூபதி:-__

அரப்பொடி பலம்.க, வெங்காரம் பலம்.க, உருக்குப் பொடி பலம்.க, செம்பு பொடி பலம்.க, பித்தளைப் பொடி பலம்.க, வெண்கலப் பொடி பலம்.க, இராயப் பொடி பலம்.க, வங்க பற்பம் பலம்.க, காந்தம் பலம்.க, ரசம் பலம்.க, கெந்தகம் பலம்.6, பச்சை நாவி பலம்.க, சவுக்காரம் பலம்.க, நெருவிஷம் பலம்.க, யிலட்சாரம் பலம்.க, சத்தியசாரம் பலம்.க, இவை சேரக் கற்றாளஞ் சாறு விட்டு மூன்று நாளரைத்துப் பொடி செய்து செங்கா சலக்

குப்பியிலடைத்து வாயை வலியப்பக் கல்லுக் கொண்டடைத்து அடைமண் கொண்டடைத்து ஒட்டி யடுப்புப் போட்டு முன் சொன்ன பிறகாரம் தீபாக்கினி மூன்று நாள்த் தீ யெரித்து நாலா நாள் தீயை பிரித்துச் செந்தூர மெடுத்துக் கொள்ளவும். பச்சை நாவி பலம்.உ திப்பிலி பலம்.உ, திப்பிலி மூலம் பலம்.உ, கோமியத்தில் கஷாயமாகக் காய்ச்சி இந்த மருந்தைச் செந்தூரமும் கசாயத்துக் கொண்டரைத்து ஒரு குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணிக் கொண்டு நிழல் உலர்த்தி உலர்த்திக் கொண்டு. இதுக் கனுபானம் இந்தச் செந்தூர உருண்டையில் ஒரு பணவிடை வெள் வெங்காயத் தயிலத்தில் கொள்ளச் சன்னி 18-ம். தீரும். யிதிலொரு பணவிடை யிஞ்சி சாத்திலிட வாதம் 80-ம் பிறவலி தலைவலி அகவிலி, குதிரை வலி, வரண வாதம் வாத மூட்சை, சேற்பன மூட்சை, முசலகண்ட மூட்சை, சன்னி மூட்சை, செவிட்டு சன்னி மூட்சை, சிவ சன்னி மூக சன்னி விருக சன்னி மற்றுண்டான வியாதிகளுந் தீரும்.

ஈசுர பூபதி:-

இரதம் பலம்.க, கெந்தகம் பலம்.க, காந்தம் பலம்.க, உருக்கு அரப்பொடி பலம்.க, பித்தளை அரப்பொடி பலம்.க, வெண்கல அரப்பொடி பலம்.க, முத்துப் பொடி பலம்.க, அரிதார பற்பம் பலம்.க, மனோசிலை பலம்.க, கல்லுப்பு பலம்.க சேங்கொட்டை பலம்.க, அசமோதகம் பலம்.க, யிவை சேரக் கற்றாழஞ் சாறு விட்டு ஒரு சாமம் அரைத்து எருக்கம் பால் விட்டு இரண்டு சாமம் அரைத்து கள்ளிப் பால் விட்டு ஒரு சாமம் அரைத்துப் பொடி பண்ணிக் கெங்கா சலக் குப்பியில் முன் சொன்ன பிறகாரம் தீபாக்கினியாக யிருபது சாமம் எரித்து நாலா நாள் தீப் பிரித்து ஆற விட்டு இந்தப் பூபதியை யெடுத்துக் கொள்ளவும்.

பச்சை நாவி பலம்.க, திப்பிலி பலம்.க, திப்பிலி மூலம் பலம்.க, பசுவின் கோமயத்தில் நனையப் போட்டு மறு நாளெடுத்து வெள் வெங்காயத் தயிலம் விட்டு அரைத்து பூபதி யோடொக்கப் போட்டு அரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலர்த்தி யிதிலொரு பணவிடை யிஞ்சி சாத்தில் இரண்டு போது கொள்ளச் சன்னி 18-ம் வாதம் 80-ம் தீரும். இந்தப் பூபதி ஒரு பணவிடை முலைப் பாலில் கொடுக்க பித்த சன்னியும் பிரமக் கிரந்தியும் தீரும். முன்னறு பானத்தின் படியே பார்த்திடவும்.

வடபான ரசபூபதி:-

சுத்தி பண்ணின யிரதம் பலம்.க, சுத்தி பண்ணின கெந்தகம் பலம்.க, சுத்தி பண்ணின காந்தம் பலம்.க, சுத்தி பண்ணின லிங்கம் பலம்.க, சுத்தி பண்ணின மனோசிலை பலம்.க, சுத்தியான அரிதாரம் பலம்.க, சுத்தியான கெவுரி பலம்.க, சுத்தியான நேர்வாளம் பலம்.க, சுத்தியான வெங்காரம் பலம்.க, சுத்த நாக பற்பம் பலம்.க தாம்பிர அரப்பொடி பலம்.க, பித்தளை அரப்பொடி பலம்.க, வெண்கலப் பொடி பலம்.க, ஒரு சங்குப் பொடி பலம்.க, பலம்.க, திப்பிலி பலம்.க, வெள்ளாட்டுப் பால், கற்றாழஞ் சாறு விட்டு ஒரு சாமமரைத்து எருக்கம் பால் விட்டு ஒரு சாமம் அரைத்து பொடி பண்ணி கெங்கா சலக் குப்பியில் முன் சொன்ன பிரகாரம் தீபாக்கினியாக 24 சாமம் தீ யெரித்து நாலா நாளாற விட்டு எடுத்து பச்சை நாவி பலம்.க, திப்பிலி பலம்.க, திப்பிலி மூலம் பலம்.க, எருக்கம் பழுத்தல் சாறு விட்டரைத்து குன்றி பிரமாணம் உருண்டை பிடித்து நிழலுலர்த்திக் கொள்ளவும். இதுக் கனுபானம் பூபதி உண்டை க-ம் துளசி சாற்றில் இரண்டு நாள் கொடுக்க சன்னி 18-ம் வாத மூட்சை சேற்பன மூட்சை வாதம்.80, சன்னி வாதம், மூடு சன்னி செவிட்டு சன்னி, சிவசன்னி, பிரலாப சன்னி, உள்வலி, பிறவலி, குதிரை வலி இவை யெல்லாந் தீரும் என்றறியவும்.

இரச பூபதி:-

இரதம் பணவிடை.10, காந்தம் 10, மாணிக்கப் பொடி.10, உருக்குப் பொடி 10, அரப்பொடி 10, செம்புபொடி 10, சாத்திர வேதி 10, யிவைகளை விட்டொரு சாமம் அரைத்து வேப்பம் பட்டைச் சாறு விட்டொரு சாமமரைத்து அடையாகப் பிடித்து ஒரு சட்டியில் வைத்து செருப்படி தழை வைத்து அந்தச் சட்டி நிரம்ப வைத்து அதை யொரு சட்டி கொண்டு மூடி சட்டி வாயை யொரு சீலை மண் செய்து முழங்கால் மட்டு உயரம் எருவடுக்கி அதின் மேலே சட்டியை வைத்து அதின் மேலே கச்சம் பட்டு சுமார் எருவடுக்கி தீப் போடவும். மறுபடி இந்தச் சாறு விட்டரைத்து மறுபடி மேலே மருந்தும் வைத்து யிப்படி யொரு புடமிடவும். நன்றாய் வெந்து தாகில் எடுத்துக் கொள்ளவும். வேகாதிருந்தால் மறுபடி புடம் போட்டுக் கொள்ளவும். இந்தப் பூபதியை யெடுத்துப் பச்சை நாவி பலம்.க, திப்பிலி பலம்.க, திப்பிலி மூலம் பலம்.க, பசுவின் கோமயத்தில் நனையப் போட்டு மற்று நாளெடுத்து யிந்த மருந்தும் பூபதியும் போட்டுச் செருப்படி சாறும் விட்டு ஒரு சாமமரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலர்த்தி யிஞ்சியுந் தேனும் திப்பிலிப் பொடியும் போட்டு இரண்டு நாள் கொள்ளச் சன்னி பதினெட்டும் வாதம் 80-ம், சன்னி சுரமும், வேர்வையும், பெரு மூட்சையும், செவிட்டு சன்னியும், விக்கலும் பலகடியும், பிறலாப சன்னியும், மூடு சன்னியும் சிவ சன்னியும், அலட்டுச் சன்னியும், சன்னி வாதமும, வயிற்றில் வலியும், கரு வாதமும், பிற வலியுள் வலி பிறகிட்டுச் சன்னி மூட்சை, வாதமூட்சை, பித்த மூட்சை, சேத்தும மூட்சை முசல கண்டம், தலைவலி, மூட்சை மற்று முண்டான வியாதி யெல்லாந் தீரும்.

சூரிய பிரதாப பூபதி:-

லோக பற்பம், பொன் பலம்.3, வெள்ளி பலம்.3, அரிதாரம் பலம்.10, மனோசிலை பலம்.10, சாதிலிங்கம் பலம்.10, பவழம் பலம்.10, முத்து பலம்.10, மாணிக்கம் பலம்.10 யிலுப்பைப் பூ பலம்.10, உருத்திராட்சம் பலம்.10 இவை யெல்லாம் கையாந்தகரை சாறு விட்டு ஒரு சாமமரைத்து கோழி முட்டை வாத்து இரண்

சர்ம்மரைத்து எருக்கம் பால் வார்த்து இரண்டு சாமமரைத்து தகடாகப் பிடித்து ஒரு சட்டியில் வைத்து ஒருசட்டி கொண்டு மூடிச் சட்டி வாயைச் சீலை மண் செய்து முழங்கால் மட்டும் எருவடிக்கி சட்டியை வைத்து அதின் மேலே பரையளவு சரம் எருவடிச்சி பொடி யெருவும் போட்டு அதின் மேலே உமியும் போட்டு கெசபுட மிடவும். தீயாற விட்டு எடுத்து பச்சை நாவி பலம். $\frac{1}{4}$; திப்பிலி பலம். $\frac{1}{4}$, திப்பிலி மூலம் பலம். $\frac{1}{4}$; பசுவின் கோமியத்தில் நனையப் போட்டு மறு நாளெடுத்து நொச்சியிலைச் சாறு விட்டு நன்றுய் மாள வரைத்து அதின் பிறகு புடமிட்ட பூபதியும் ஒக்கப் போட்டரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலர்த்தி யிதற்கு அநுபானம் நொச்சியிலை சாத்திலொரு உருண்டை கொடுக்க வியாதி யெல்லாந் தீரும்.

<u>இரத செந்தூரம்:-</u>

யிரத செந்தூரம் பலம்.10, காந்த செந்தூரம் பலம்.10, லோக செந்தூரம் பலம்.10, பூரண சந்திரோதையம் பலம்.10, திரலோக்கிய சிந்தாமணி பலம்.10, நாக செந்தூரம் பலம்.10, காரீய செந்தூரம் பலம்.10, அரிதார செந்தூரம் பலம்.10, மனோசிலை பலம்.10, செவ்ரி பலம்.10, திப்பிலி பலம்.5, நாவி பலம்.10, வெங்காரம் பலம்.10, கடுகுரோகணி பலம்.10 தாம்பிர பற்பம் பலம்.10, பித்தளைப் பொடி பலம்.10, முந்திரிகைப் பழம் பலம்.5, பேரீத்தம் பழம் பலம்.5, ருத்திராட்சம் பலம்.5 யிவை சேர்த்து துளசிச் சாறு விட்டரைத்து அடையாகப் பிடித்து ஒரு சட்டியில் வைத்து ஒரு ஓடு கொண்டு மூடி ஏட்டை சீலை மண் செய்து குக்கிட புடமாக ஒரு புடமிடவும். பிறகு இந்தப் பூபதியை யெடுத்து செம்பருத்தம் பூச் சாறு விட்டரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பிடித்து நிழலுலர்த்தி வைத்துக் கொள்ளவும். இதற்கு அநுபானம் யிஞ்சி சாத்தில் ஒரு உருண்டை யிட சன்னி 18-ம் வாதம் 80-ம், சன்னி மூர்ச்ச வாதம், மூர்சை பித்த மூர்ச்சை. சிலேற்பன மூர்ச்சை, முசல கண்ட மூர்ச்சை, மற்றுண்டான வியாதி யெல்லாந் தீரும். எந்த அநுபானத்திலிட்டாலுந் தீரும்.

<u>பராக்கிரம் பூபதி:-</u>

யிரசம் பலம்.5, வெங்கலப் பொடி .5, லிங்கம்.5, வெண்காரம்.5, செம்பு பொடி.5, பித்தளைப் பொடி.5, காந்தம்.5, கெந்தகம்.10, சுத்த நாக பற்பம்.5, அபிமூரம்.5, மனோசிலை.5, அன்னபேதி.5, அரிதாரம்.5 யிவை சேரக் கரு நொச்சி சாறு விட்டு நாலு சாமம்ரைத்து யிலைக் கள்ளிச் சாறு விட்டு இரண்டு சாமம்ரைத்து அடையாகப் பிடித்து ஒரு சட்டியில் வைத்து சட்டி நிரம்ப யிலைக் கள்ளியிலையை யரைத்துக் குவைத்துப் போட்டு யிலைக் கள்ளிப் பால் நாழி விட்டு சட்டி கொண்டு மூடி சீலை மண் செய்து, தீபாக்கினி போலே பன்னிரண்டு சாமம் எரிட்டு பதினெட்டுச் சாமம் தீப் பிரித்து ஆற விட்டு எடுத்து பச்சை நாவி பலம். $\frac{1}{4}$, திப்பிலி பலம். $\frac{1}{4}$, திப்பிலி மூலம் பலம். $\frac{1}{4}$, பசுவின் கோமியத்தில் நனையப் போட்டு மறு நாளெடுத்து நொச்சியிலைச் சாறு விட்டு நன்றுய் மாள யரைத்துப் பூபதியை யொக்கப் போட்டு அரைத்துக் குன்றிப் பிரமாணம் உருண்டை பிடித்து நிழலுலர்த்திக் கொள்ளவும். சன்னி 18-ம் தீரும். யிதற்கு அநுபானம் யிஞ்சி சாற்றிலும் தேனிலும் ஒரு உருண்டை கொடுக்க வாதம் 80-ந் தீரும். மது சன்னி, பித்த சன்னி, சிவ சன்னி, பிரலாப சன்னி, அலட்டு சன்னி, செவிட்டு சன்னி, சுரவாதம், பித்த சன்னி, உள்வலி, பிறவலி பெருமூச்சு, குதிரை வலி, விரண வாத சன்னி மூர்ச்சை பித்தமூர்ச்சை, சிலேற்பன மூர்ச்சை, முசல கண்ட மூர்ச்சை, களலான உடம்பு வேர்வை, கன்னீர் ததும்புதல் யிவை யெல்லாந் தீரும்.

<u>நாக நாதர் சித்தர் காரீய செந்தூரம்:-</u>

காரீய முகிரி கட்டி பலம்.10, பசுவின் கோமியம், பசுவின் சாணகம் உப்பு யிவை யிம் மூன்றும் பசுவின் மோரும் ஒன்றுக்கி யிதிலிருபது தரம் உருக்கிச் சாய்த்துக் கொள்ளவும். இந்த வங்கத்தை எடுத்து ஒரு புதுச் சட்டியில் போட்டு உரி, வெடியுப்பும் போட்டு சிறுகச் சிறுகப் போட்டு வறுக்கவும். பிறகு அவின் மருந்து ஐந்து களஞ்சு போட்டு வறுக்கவும். பிறகு அம்மான் பச்சரிசி யிலை கொண்டு வந்து சிறுகச் சிறுகச் சிவக்கு மட்டும் வறுக்கவும். போட்டு இரண்டு நாள் வறுக்கவும். செந்தூர முருக்கம் பூப் போலே யிருக்கும். இதற்கு அநுபானம் யிதிலொரு பணவிடை யும், நற்சீரகம்.க, பணவிடை., சுகை நீர்.க பணவிடை, கஸ்தூரி மஞ்சள்.க, பணவிடை. ஏலம்.க பணவிடை, வாய்விளங்கம் .க பணவிடை, மலைபிலவம் பிசின் க பணவிடை, விராம்பிசின் பணவிடை.க, கருவேலம் பிசின் பணவிடை.க, மரமஞ்சள் பணவிடை.க, ஆவாரை விரை.40, பணவிடை, வாகை விரை 10 பணவிடை சமுத்திர சோகி விரை 10 பணவிடை, பூமி சர்க்கரை கிழங்கு 10 பணவிடை, நிலப் பனைக் கிழங்கு 10 பணவிடை, அவின் 5 பணவிடை, கோவின் விரை 5 பணவிடை தாமரை விரை 5 பணவிடை, அகத்தி விரை 5 பணவிடை, பிரும் விரை 5 பணவிடை யிவை சேரத் தேங்காய்ப் பால் விட்டு அரைத்து வெயிலிலே உலர விட்டு பொடி செய்து அதற்கு சர்க்கரையும் ஒக்கக் கூட்டி இந்தச் சூரணத்தில் வெருகடிப் பிரமாணம் அதற்குச் சீனியும் செந்தூரத்திலொரு பணவிடையும், குளிகையாகல் தேனிலும் உட்டின மாமல், வெண்ணெயிலும் இரண்டு நேரமும் நாற்பது நாள் கொள்ள தீராணி, நீரளிவு, 21-ம், எச்சிலைப் பிரமியமும் 18-ம் யிந்திர கண்டியும் சோம ரோகமும் 12-ம் கிரணி 6-ம் அதிசாரம் 12-ம், நீர்க் கடுப்பு, உள்ச் சுரம், உள்ருக்கி, எலும்பு ருக்கி12-ம் பித்த கோபம் 128-ம் உட்டின ரோகம் 326, சுரம் 32-ம் காலெரிப்பு, கை யெரிப்பு, முக மெரிப்பு யிவை யெல்லாந் தீரும். தாது வற்திக்கும். உடம்பிலே புஷ்டியுண்டாம்: அற்ப போச்சாரருக்கு அழுப் போகமுண்டாம்.

<u>நாக செந்தூரம்:-</u>

சுத்த நாக முகிரிக் கட்டியாய் யிதுப்பெ யெண்ணெயும், பசுவின் வெண்ணெயும் கறண்டியில் தடவி வெள்ளாட்டுப் பாலில் யிருபது தரமுருக்கிச் சாய்த்து பிறகு ஒரு

புடச் சட்டியிலிட்டு வெடியுப்பு நாறியும் அசமோதிரம் சுக்கு பலம்.க, மஞ்சள் பலம்.க, எல்லாம் பொடி செய்து சிறுகச் சிறுகப் போட்டு வறுக்கவும். இரண்டு சிவந்த நாயுருவி கண்டமாக நறுக்கிப் போட்டு வறுக்கவும். மாதளம் பூப் போலே வெந்திருக்கும். இதக் கனுபானம் யிதிலொரு பணவிடையும், திரிகடுகு வெருப்பிப் பொடி செய்து வெருகடிப் பிரமாணம் தேனில் இரண்டு நேரமும் நாற்பது நாள் கொள்ள யீளை யிருமல் மந்தார காசம் காச சுவாசம், சுவாச காசம், அரிசுரல், நெஞ்சு நோவு, சேற்றுமம் 96-ம் பித்த கோபம் 128-ம் சதையடைப்பன் 16, குன்மம்18-ம் சோம ரோகம் 12-ம் பவுந்திர 20-ம், முக மெரிப் புகை யெரிப்பு, காலெரிப்பு யிவை யெல்லாந் தீரும். யிதிலொரு பணவிடையும், கொடிவேலிச் சூரணத்தில் தேனில் இரண்டு நேரம்.20 நாள் கொள்ள சத்தி குன்மம், எரிகுன்மம், வலி குன்மம், யீளை யிருமல், எலிகடி, வாய்வு 26-ம் வாதம் 80-ம் குட்டம் 18-ம், சிரங்கு சொறி சேற்றுமம் 96-ம் பயித்தியத்திரச்சி கறு உள்ளங்கால், விரிந்தலும் உடம்பு கருப்பும் மூலைக் குத்து மூலைப் புத்து தீரும். யிதிலொரு பணவிடையும், பேய்ப் பீர்க்கங் கூட்டுத் தான் வரைப் பணவிடையும், தேனில் குழப்பி தண்டில் தடவிப் புணர கெற்பப் புழுச் செத்து கெற்ப ரோகமும் போய் புத்திர சந்தானம் உண்டாம். இந்தப் படியே யாசனத்து மூலத்தில் மூன்று நாள் தடவ மூல முளை கரையும். மூல வாய்வு தீரும்.

<u>சொர்ண பற்பம்:-</u>

தங்க காசு பணவிடை.10, அஞ்சனக் கல்லு, வெட்டு கல்லு தண்ணீர்க் கல்லு, வெடி கற்பூரம், வங்க பற்பம், அரிசு யிலை சேர்.5 பணவிடை எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்து கண்டங்கத்திரிச் சார் விட்டு அரைத்து இதை அந்த தங்க காசிலே தடவி உலா உலரத் தடவி ஏழு ஆலிலை மேலே வைத்து ஏழு ஆலிலை கொண்டு மூடி அந்தச் சீலை மண் செய்து ஒரு சின்னச் சட்டியில் வைத்து ஒரு சட்டி கொண்டு மூடி சீலை மண் செய்து முழங்கால் மட்டும் எருவடுக்கி யிதின் மேலே வைத்து அதின் மேலே யிரையளவு உயரம் எருவடுக்கி கெசபுட மிடவும். ஆறின் பின் விட்டெடுத்து ஆலிலையை நீக்கி பார்க்கவும். தங்கக் காசு முத்திரி யழியாமல் வெந்து பற்பமாக யிருக்கும். இந்த பற்பமொரு பணவிடையும் திரிகடுகு, வெருப்பி பொடி செய்து வெருகடிப் பிரமாணம் தேனில் நாற்பது நாள் கொள்ள வாதம் 80, வாய்வு 26, குன்மம்.16, பித்தம் 128, சேற்றுமம் 96 தீரும். சரீரம் வச்சிர காயம்:

<u>அரிதார பற்பம்:-</u>

அரிதாரம் பலம்.30, கொண்டு வந்து காடிச் சாற்றில் டோளாந்திரமாக கட்டி அவிக்கவும். பிறகு சுண்ணாம்பு தண்ணீரிலே டோளாந்திரமாக் கட்டி அவிக்கவும். பிறகு பூசனிக்காய்ச் சாற்றிலே டோளாந்திரமாக் கட்டி அவிக்கவும். பிறகு அதை எடுத்து கொண்டு புரோசம் பட்டை சாறு கொண்டு ஒரு சாமமரைத்து வடகமாக பிடித்து புரோசம் பட்டையை அரைத்து ஒரு சட்டியிலிட்டு அதின் மேலே தக்கு மருந்தும் வைத்து பிறகும் ரோசம் பட்டையை யிடித்து நிரம்ப வைத்து ஒரு சட்டி கொண்டு மூடிச் சட்டி வாயைச் சீலை மண் செய்து தீபாக்கினி கமலாக்கினி, காடாக்கினியாக் மூன்று நாள் எரித்து நாலா நாள் தீப்பிரித்து எடுக்கவும். வெள்ளையாய் சங்கு போலே கட்டியா யிருக்கும். யிதிலொரு பணவிடை தேனில் பத்து நாள் கொள்ள புள் குடோரம் சூலை தீரும். யிதிலொரு பணவிடையும், வெருகங் கிழங்கும் விள்ளம் பொருக்கும் ஒரு காசிடையாக குழப்பி இரண்டு நேரமும் தின்ன வெண் குட்டம், கபால குட்டம், விரி குட்டம், செவ்வட்டை கடி, குறை நோவு, செங்குட்டம், பதினெட்டு குட்டமும், கர்மகடி, வண்டுகடி, குன்மம், மண்டை குடைல், சொறி பறங்கி; சிரங்கு, தொண்டைக்குள் புண்ணும், தீராப் புண்களும் கழுத்துக் கட்டி விரணமும் ஆரம் கண்ட மாலையும் படர் தாமரையும் தீரும். யிதிலொரு பணவிடையும் திப்பிலி பொடி ஒரு விராகனிடையும் தேனில் குழைத்து இரண்டு நேரமும் கொள்ள யீளை யிருமல்; எலி கடி, மந்தார காசம், காச சுவாசம், சுவாச காசம், உள்மாந்தை, சுரமாந்தை இவை யெல்லாந் தீரும்.

<u>அரிதார வெண்ணை:-</u>

அரிதாரம்.50 பணவிடை, பூசனிக்காய் சாற்றில் டோளாந்திரமாக கட்டி வேக வைத்துக் கொண்டு பசிலியிலையை யவித்து புளிந்த கொண்டு அந்த தண்ணீர் வார்த்து ஒரு சாம மரைக்கவும். அதின் பிறகு மப்பை மேனிச் சாறு விட்டு ஒரு சாமமரைக்கவும். கஞ்சா யிலைச் சாறு விட்டு ஒரு சாமமரைக்கவும். அதை வடகமாகப் பிடித்து அதை ஒரு சட்டியில் உப்பையிட்டு கஞ்சா யிலை இரண்டு தேங்காய் பிரமாணம் அரைத்து இந்த உப்பு மேலே வைத்து புரசம் பட்டை ஒரு விளாங்காயளவு முன் மருந்தடலே கவ்வ வைத்து அதின் மேலே அரிதார வடகத்தை அடையை வைத்து அதின் மேலே கஞ்சா யிலையும், புரசம் பட்டையும் அரைத்து மூடி யந்தச் சட்டி நிரம்ப உப்பையிட்டுச் சக்கே தண்ணீர் தெளித்து சட்டி கொண்டு மூடி சட்டி வாயை ஏழு சீலை மண் செய்து அடுப்பிலே வைத்து பன்னிரண்டு சாமந் தீ யெரிக்கவும். ஆறவிட்டு சட்டி யிருப்பைக் குத்தி யெடுத்துப் போட்டுப் பற்ப மெடுத்து கொள்ளவும்: முன் சொன்ன மருந்து வைக்கிற போது புளியும் பிசறி யந்த உப்புடனே விரவி வைக்கவும். யிந்தப் பற்பத்துக்கு அனுபானம் யிதிலொரு பணவிடையும் பனங் கருப்புக் கட்டியில் வைத்து இரண்டு போது யிருபது நாள் கொள்ள சூலைக் கடுப்பு, புண்கள் சூலை 17-ம்: வாய்வு 26-ம் மண்டை சூலையும், தொண்டைக்குள் புண்ணும் கண்டமாலையும், கண்ட விப்புருதியும், அரையாப்பும், மாறப் புக்கும் மூட்ட வாளையும், பவுந்திரமும் சிரசு மேற் புள்ளியுந் தீரும். யிதிலொரு பணவிடை திரிகடுகு வெருப்பிப் பொடி செய்து தேனில் குழப்பி இரண்டு நேரமும் வெருகடி பிரமாணம் பத்து நாள் கொள்ள யீளை இருமல் மந்தார காசம், காச சுவாசம், சுவாச காசம், யிளைப்பு, இரைப்பு, சத்தி குன்மம், வலி குன்மம், எரிகுன்மம், வாய்வு 26-ம் தொண்டை புற்றுண்டான வியாதி யெல்லாம் தீரும். யிதிலொரு பணவிடையும், புங்கம் பட்டையும், வேப்பம் வயிரமுந் தயிலம்

வைத்து இந்த தயிலத்தில் ஒரு காசிடையும், தேகம் விட்டு இரண்டு நேரம் 40 நாள் கொள்ள குட்டம் 18-ம் செங்குட்டம், கருங்குட்டம், விரி குட்டம், வெண் குட்டம், எசாரி குட்டம், குறை நோவு, பெருநோவு, சிரங்கு, சொறி, படர் தாமரை, வண்டு கடி, விஷ பாகம், காணாக் கடி, சிறு பாம்பு கடி, செய்யான் கடி, பொறி கடி, கடி விஷம், காலில் கடி விஷம், தரையில் கடி விஷம், பித்த ரோகம், தீராத புண்களெல்லாந் தீரும்.

காந்த பற்பம்:-

ஊசிக் காந்தம் பலம் .10, ஒரு சட்டியில் போட்டு காடிச் சாறு நிரம்ப விட்டு ஒரு சட்டி கொண்டு மூடி அவிக்கவும். அந்தச் சாறு சுவறவே விட்டு எடுத்து லிங்கோலி போட்டு கல் உரலிலே போட்டு கடப்பாரை கொண்டு இடித்து அளாக்கி இரசம் பலம் .உ, கெந்தகம் பலம் .உ, வெண்காரம் பலம் .க, இவை கற்றாழைச் சாறு விட்டு ஒரு சாமம் அரைத்து பிறகு கய்யாந் தகரைச் சாறு விட்டு ஒரு சாமமரைத்து வில்லை தட்டாகப் பிடித்து ஒரு சட்டியில் வைத்து மேல் சட்டி கொண்டு மூடி ஏழு சீலை மண் செய்து முழங்கால் மட்டும் எருவடுக்கிப் பொடி யெருவும் போட்டு அதின் மேலே சட்டியை வைத்து அதின் மேலே அரையளவு சரம் எருவடுக்கி பொடி எருவும் போட்டு தீப் போடவும். மறு நாள் எடுக்கவும் பொடி செய்து கொள்ளவும். இதிலொரு பணவிடையும், திரிகடுகு வெருப்பி பொடி செய்து வெருகடிப் பிரமாணம் தேனில் இரண்டு நேரம் மூன்று நாள் கொடுக்க சத்தி குன்மம், வலி குன்மம், வாய்வு இவை தீரும். இதிலொரு பணவிடை மாதுளைச் சூரணம் வெருகடிப் பிரமாணம் தேனில் இரண்டு நேரம் மூன்று நாள் கொடுக்க கிராணி ஆறு வகையும் தீரும்.

நாக பற்பம்:-

சுத்த நாகம் பலம் .3, இரசம் பலம் .க, சுத்த நாகத்தை வெள்ளாட்டின் பாலிலே பத்து தரமுருக்கி சாய்த்து நாக முருகின முகத்தில் இரசத்தை விட்டு இரண்டு மொன்றாக விட்டு எடுத்து ஒரு சட்டியில் வைத்து கவுரியைக் கண்டங் கண்டமாக நறுக்கிச் சிறுகச் சிறுகப் போட்டு வறுத்துக் கொள்ளவும் பற்பமாம். பற்பமாகு மட்டும் இரண்டு நாள் வறுக்கவும். இது பற்பமானதை யெடுத்துக் கொண்டு இதுக் கருப்பான இதிலொரு பணவிடையும், சாதிக்காய், கிராம்பு, குருசாணி ஓமம், அதி விடையம், வெருப்பி பொடி செய்து தேனில் இரண்டு நேரம் வெருகடிப் பிரமாணம் முப்பது நாள் கொடுக்க கிராணி ஆறு வகையும் தீரும். சத்தி குன்மம், வலி குன்மம், எரி குன்மம், வயிற்றில் வலியும் அக்கினி மந்தம், குன்மம் 16-ம் தீரும். இதிலொரு பணவிடையும், ஆவாரம் சூரணத்தில் வெருகடிப் பிரமாணம் தேனிலும் எருமைத் தயிரிலுமொன்றில் விட்டு ஒரு நாள் இரண்டு போது பத்து நாள் கொள்ள சலக் கழிச்சல் தீரும்.

லோக செந்தூரம்:-

அரப்பொடி பலம் .5, வெண்காரம் பலம் .ச, திரிகடுகு பலம் .ரு, சுத்த நாகம் பலம் .க, காந்தம் பலம் .க இவை சேரக் கய்யாந் தகரைச் சாறு விட்டு ஒரு சாமமரைத்து எருக்கம் பழுத்தல் சாறு விட்டு ஒரு சாமமரைத்து வில்லை தட்டாகப் பிடித்து கய்யாந் தகரை யரைத்து வைத்து ஒரு சட்டியிலிட்டு அதின் மேலே சட்டியை வைத்து அதின் மேலே அரையளவு உயர எருவடுக்கிப் பொடி எருவும் போட்டு தீப் போடவும். நாலாறு விட்டு எடுத்துக் கொள்ளவும். இந்தப் பற்பத்தி மூன்று பணவிடையும், கையாந்தகரை உலர்த்திப் பொடி செய்து வெருகடிப் பிரமாணம் பனை வெல்லத்தில் பத்து நாள் கொள்ள வறட்சி காமாலை, ஊது காமாலை, ஊறு காமாலை, பாண்டு ரோகம், விஷ பாகம், சோகை, செற்பத்தினாலுண்டான வியாதி எல்லாந் தீரும். இந்த பற்பத்தை தேனிலே பத்து நாள் கொள்ள சத்தி குன்மம் வலி குன்மம், மூல வாய்வு, மூல ரோகம், பீனிச இருமல் இவை யெல்லாந் தீரும்.

(வேறு)

வங்க பற்பம்:-

வெள்ளீர் பலம் .5, புளிய நடலைக் கிழங்கு, தேங்காயளவு அரைத்து எருமை மோரில் கரைத்து வெள்ளீயத்தை இப்படி தரமுருக்கிச் சாய்த்து பிறகு சட்டியிலே போட்டு ஆவாரை வேரும், அரசம் பட்டையும் வட்டத் துத்தி வேரும் அமுக்கிரா வேரும் சிறுகச் சிறுக நறுக்கிப் போட்டு மூன்று நாள் வறுத்துப் பற்பமானதை யெடுத்துக் கொண்டு இந்த நாலு வேரையு மரைத்து ஒரு சட்டியிலே இடவும். அதின் மேலே பற்பத்தை வைத்து அதின் மேலே அரைத்த மருந்தை வைத்து ஒரு சட்டி கொண்டு மூடி சட்டி வாயை ஏழு சீலை மண் செய்து முழங்கால் மட்டும் உயர எருவடுக்கி மேலே வைத்து அதின் மேலே அரையளவு உயரம் எருவடுக்கி கெசபுடம் இடவும். இப்படிப் பத்து புடமிடவும். அதை எடுத்துக் கொள்ளவும். நிறம் வெள்ளியாகச் சங்கு நிறமாக இருக்கும். இதைக் கரபானம் இதிலொரு பணவிடையும், ஆவாரை தயிலத்தில் இரண்டு நேரம் இருபது நாள் கொடுக்க சலக் கழிச்சல் தீரும். இதி லொரு பணவிடையும், அமுக்கிரா சர்க்கரை வெருகடிப் பிரமாணம் சீனியும் கூட்டி வெண்ணெயில் இரண்டு நேரமும் பத்து நாள் கொடுக்க காசத்தில் பிரமியம் 18-ம் கிரிச்சனம் 18-ம், மித்திர கண்டி 5-ம் உட்டிண ரோகம் 326-ம் தீரும்.

வங்க பற்பம்:-

வெள்ளீயம் பலம்3. எருமை மோரிலே பத்து தரம் உருக்கிச் சாய்த்துக் குளிர் தாமரை யரைத்து பொதிந்து சீலை மண் செய்து ஒரு சட்டியில் வைத்து ஒரு சட்டி

யிலே போட்டு ஆவாரை வேரும் அசரம் பட்டையும் வட்டத் துத்தி வேரும், அமுக்கிரா வேரும் சிறுகச் சிறுக நறுக்கிப் போட்டு மூன்று நாள் வறுத்துப் பற்பமாக லெடுத்துக் கொண்டு யிந்த நாலு வேரையு மரைத்து ஒரு சட்டியிலே யிடவும். அதின் மேலே பற்பத்தை வைத்து அதின் மேலே அரைத்த மருந்தை வைத்து ஒரு சட்டி கொண்டு மூடி சட்டி வாயை ஏழு சீலை மண் செய்து முழங்கால் மட்டும் உயர மெருவடுக்கி மேலே வைத்து அதின் மேலே அரையளவு உயரம் எருவடுக்கி கெசபுடம் யிடவும். யிப்படிப் பத்துப் புட மிடவும். அதை எடுத்துக் கொள்ளவும். நிறம் வெள்ளையாகச் சங்கு நிறமாக விருக்கும். இதற் கநுபானம் யிதிலொரு பணவிடையும் ஆவாரை கயிலத்தில் இரண்டு நேரம் இருபது நாள் கொடுக்க சலக் கழிச்சல் தீரும். யிதிலொரு பணவிடையும் அமிர்த சர்க்கரை வெருகடிப் பிரமாணம் சீனியும் கூட்டி வெண்ணெயில் இரண்டு நேரமும் பத்து நாள் கொடுக்க காசத்தில் பிரமியம் 18-ம் சிறிச்சனம் 18-ம் யிந்திர கண்டி 5-ம் உட்டின ரோகம் 32.6-ம் தீரும்.

__வங்க_பற்பம்:-__

வெள்ளீயம் பலம்.3, எருமை மோரிற்பத்து தர முருக்கிச் சாய்த்துக் குளிர் தாமரை யரைத்து பொதிந்து சீலை மண் செய்து ஒரு சட்டியில் வைத்து ஒரு சட்டி கொண்டு மூடி அதின் மேலே அ ரையளவு உயர மெருவடுக்கி கெசபுட மிடவும். இந்தப் பற்பத்தை யெடுத்துக் கொண்டு யிதில் ஒரு பணவிடையும், சீனி வெருகடிப் பிரமாணமும் பசுவின் வெண்ணெயில் மத்திச்சு இரண்டு நேரம் யிருபது நாள்க் கொள்ள பிரமியம் மூத்திரக் கடுப்புந் தீரும். யிதிலொரு பணவிடை அட்ட கசாயத்தில் இரண்டு போது முப்பது நாள் கொள்ளக் கிறுணி 6 வகையும் அதிசாரம் 12 வகையும் மூலம் 9 வகையும் தீரும். முன்னறு பானம் பார்த்திடக் கிறுணி வகையும் வயத்துக் கடுப்புந் தீரும். யிதிலொரு பணவிடையும் சுட்ட கசாயத்தில் வெருகடிப் பிர்மாணம் தேனில் கொடுக்க இரண்டு போது 30 நாள் கொள்ள கிறுணி 6 வகையும் அதிசாரம் 12-ம் மூலம் 9-ம் தீரும். முன்னறுபானம் பார்த்திட கிறுணி வகையும் வயத்தில் வலிப்பும் முறுக்கும், சீதக் கடுப்பும் யிவை யெல்லாந் தீரும்.

__யிரத_தாம்பிரக்_குளிகை:-__

தாம்பிர பற்பம் பலம்.க, யிரசம் பலம்.$\frac{1}{2}$, கெந்தகம் பலம்.$\frac{1}{2}$, வெண் காரம் பலம்.$\frac{1}{2}$, மனோசிலை பலம்.$\frac{1}{4}$, திப்பிலி பலம்.$\frac{1}{4}$, பச்சை நாவி பலம்.$\frac{1}{2}$, நிறுவிஉடம் பலம்.$\frac{1}{4}$, சாதிலிங்கம் பலம்.$\frac{1}{2}$, கடுகுரோகணி பலம்.$\frac{1}{2}$, மிளகு பலம்.$\frac{1}{2}$, இவை சேரக் கத்தாளச் சாறு விட்டரைத்து மிகி பாகல் சாறு விட்டு ஒரு சாமமரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி முன் மருந்துடனே சுத்தி பண்ணின நேர்வாளம் ஒக்கப் போட்டரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழல் உலத்தி வைக்கவும். யிதிலொரு குளிகை யிஞ்சிச் சாத்திலிடவும். பயித்தியம் 128-ம் தீரும். யிதிலொரு பணவிடை திரிகடுகு, திப்பிலி பொடி பண்ணி வெருகடிப் பிரமாணம் கொடுக்கவும். கிறுணி சூரணமும் திரிகடுகும், சாதிக்காயும், சாதிபத்திரியும், குரோசாணி ஓமம், வாய் விளங்கம், கூகை நீர், கொத்தமல்லி செங்கழுநீர் கோட்டம், அதிமதுரம், சமுத்திரப் பழம், சமுத்திர சோகி விரை, சாதிலிங்கம், கஞ்சாவிரை, ஊமத்தம் விரை, முருங்கை விரை, அகத்தி விரை, பிராய் விரை, அமுக்கிரா வேர், பூமி சர்க்கரை கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு, கோரைக் கிழங்கு, வீளி வேர், வீளிக் காய், தேறல் புல்லு கிழங்கு, வேல் விரை, கருவேலங் காய், விளாவிரை, மருதங் கொட்டை, மாங்கொட்டை, வாழைப் பழ பழத்தின் விரை, பூவரசம் விரை, அமுத வள்ளிக் கிழங்கு, சிறு கழங்கு, புடி கிழங்கு கஸ்தூரி கற்பூரம், கோரோசனை பெருஞ்சீரகம், குங்குமப்பூ, கிராம்பு இலை ஒன்றுக்கு மூன்று கழஞ்சு வீதம் வறப்பாக வறுத்து பொடி செய்து கிழங்கும் உலத்திப் பொடி செய்து சேரச் சீலை வடி கொண்டு இந்த சூரணத்தில் வெருகடி பிரமாணம் சீனியும் கூட்டி சூரணம் பண்ணி கொடுக்கவும். கும்பன வாய்வு மூன்று கிறுணி வாய்வுக்கு அவின் கூட்டி சூரணம் கொடுக்க கழிச்சல் ஒக்கப் பிடிபடும். கிறுணியும் தீரும். மூல வாய்வுக் கார்ரன் தன்க்கும் கடுகுரோகணி.க, பணவிடை ஒக்க சூரணம் பண்ணிக் கொடுக்கவும்.

__அரிதார_செந்தூரம்:-__

அரிதாரம் பலம்.3, சுண்ணாம்பு தண்ணீரில் சுத்தி பண்ணி கனத்த கரும்பு துளைத்து தும்பை யிலையை அரைத்து கரும்புக்குள்ளே வைத்து அதுக்குள்ளே அரிதாரத்தை வைத்து மேலு யிந்த மருந்து கொண்டு மூடி மூன்று சீலை மண் செய்து யெருவடுக்கி அந்தக் குடும்பை நாட்டி அதில் நிரம்ப எருக்கக்கி* மூடி தீப் போடவும். நாலு நாழிகை வேக விட்டு யெடுத்து பார்க்க முருக்கம் பூப் போலே யிருக்கும். யிதிலொரு பணவிடையும் திப்பிலிப் பொடியும் விராகனிடை தேனில் குழைத்து எட்டு நாள் தின்ன ஈளை இருமல், எலி கடி, சூலை கடுப்பு தீரும்.

__அரிதார_செந்தூரம்:-__

அரிதாரம் பலம்.க, சுண்ணாம்பு தண்ணீரிலாவது, பசளிக்காய் தண்ணீரிலாவது, தும்பை யிலையை யரைத்து ஒரு சட்டியில் தப்பி அதின் மேலே அரிதாரத்தை வைத்து அதின் மேலும் அரைத்த மருந்தை வைத்து கொட்டாங்கச்சி கொண்டு கவுழ்த்து மூடி அடுப்பில் வைத்து கமலாக்கினியாகத் தீயிட்டு எரிக்கவும். அதை நீக்கிப் பார்த்துக் கொண்டு அந்த அரிதார முருக்கம் பூப் போலே சிவந்ததாகில் யெடுத்துக் கொள்ளவும். யிதற்கநு பானம் திரிகடுகு வெதப்பி பொடி செய்து வெருகடிப் பிரமாணம் செந்தூரத் திலரைப் பணவிடையும் தேனில் குழைத்து இரண்டு போதெட்டு நாள் கொள்ள ஈளை இருமல் மந்தார காசம், காச சுவாசம், சூலை கடுப்பு யிவை யெல்லாந் தீரும்.

தாம்பிர பற்பம்:-

தாம்பிரம் பலம்.உ, உருக்கி வட்டாக வார்த்து அந்த வட்ட கலம் தரையிலே குழியை கெல்லி ஒரு விரலாழம் கெல்லி தாம்பிரத்தை சிவக்கக் காய்ச்சி அந்தக் குழியில் சுரைக்காய்ச் கெந்தகத்தைப் பொடி பண்ணிப் போட்டு அதின் மேலேயும் கெந்தகப் பொடியைப் போட்டு அதின் மேலே சற்று மிப் போட்டு ஒரு தடிக் கம்பு கொண்டு அமுக்கிக் கொண்டு குக்கு ஆற விட்டெடுத்து கத்தியால் கொண்டு தட்டினால் பட்ட தகடாக விழும். பற்பத்தை எடுத்துக் கொண்டு தகட்டை பண்டு போலே புடமிட்டு வைக்கத் தகடு பற்பமாம். இந்த பற்பத்திற்கு அநுபானம் யிதிலொரு பணவிடையும் திரிகடுகு வெதுப்பி பொடி செய்து வெருகடிப் பிரமாணம் தேனில் இரண்டு போது இருபது நாள் கொள்ள வாய்வுத் திரட்சி குன்மங் காமாலை யிவை யெல்லாந் தீரும். யிரத பற்பத்திலொரு பணவிடையும் யிஞ்சிச் சாறு, எலுமிச்சம் பழச் சாறும், வெங்காரமும் பொரித்துப் போட்டு ஐந்து நாள் கொடுக்க பைத்தியம் பாண்டு ரோகம், சோகை, பித்தம் இவை தீரும். யிஞ்சியை அரைத்து அதக்குள் வைத்து பத்து நாள் கொடுக்க வயத்தில் விடு நீரும் வயத்துக் கடுப்பும் உஷ்ணமும் வேர்வையும் தீரும்.

தாம்பிர பற்பம்:-

தாம்பிரத்தை தகடாக தட்டி தாம்பிரத் தளவு யிறையாளத்துக்கு செங்கல் குழி தோண்டிக் கெந்தகத்தை அரைத்துக் கீழு மேலும் தகட்டில் பூசி யந்தக் குழியிலே கெந்தகப் பொடியைச் சத்தே போட்டு தகட்டை வைத்து மேலுங் கெந்தகப் பொடியைப் போட்டு ஒரு செங்கல் கொண்டு மூடி ஏழு சீலை மண் செய்து முழங்கால் வரையும் எருவடுக்கி அதின் மேலே வைத்து அரையளவு உயர மெருவடுக்கி தீப் போடவும். தீயாற விட்டு கத்தியால் கொண்டு சத்தே தட்டி பார்த்தால் உள்ளே சற்று தாம்பூர மிருந்தால் கடக்க வைக்கவும்: பற்பத்தை எடுத்துக் கொள்ளவும். யிதிலொரு பணவிடை திரிகடுகு வெதுப்பி பொடி செய்து தேனில் யிஞ்சிச் சாறு விட்டு மத்திச்சு இரண்டு போது முப்பது நாள் கொள்ள சத்தி குன்மம், எரிகுன்மம், வலி குன்மம், பயித்தியம், யீளை இருமல், எலிகடி, மந்தார காசம், காச சுவாசம் பயித்திய பாண்டு ரோகம், காமாலை, வரட்சை காமாலை, நீர்க் காமாலை, பித்த காமாலை, ஊது காமாலை வாக்கிரந்தி வெப்பு பாவை வயத்தில் வியாதி சேரும் விஉ பாகன் கிரந்தி கரப்பன், நாக்குச் சிலந்தி கெந்த தாளி சுழல் பித்தக் கிறுகிறுப்புக் குடல், கொழுப்பு, சேற்பன கோபம் 96-ம் பித்த கோபம் 128-ம் தீரும். இந்தப் பற்பத்திலொரு பணவிடையும் அட்ட கஷாயத்தில் 20 நாள் கொடுக்க கிரணி 6-ம் அதிசாரம் 12-ம் மூலம் 9-ம் வயத்தில் கடுப்பு, வயத்தில் முறுக்கம் அக்கினி மந்தம், பசி மந்தம், நெஞ்செரிப்பு, வாய்வு, நீர்ச் சுளுக்கும், தான மூல வாய்வும், பயித்திய வாய்வும் தீரும்..

(வேறு)

~~(அட்ட-மூல-வாய்வும்-பயித்திய-வாய்வும்~~

(அட்ட கசாயம் பஞ்ச மூலத்துக்குப் பெயர்) சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, குரோசாணி ஓமம், அதிவிடையம், நீர்முள்ளி விரை, கஞ்சாவிரை, குறண்டி விரை, அவின், ஊமத்தம் விரை, வகைக்கு காஞ்சு வெதுப்பி பொடி செய்து இந்த சூரணத்தில் வெருகடிப் பிரமாணம் வங்க பற்பமாகிலும் காந்த பற்பமாகிலும் தாம்பிர பற்பமாகிலும் யிதிலொரு பணவிடை கூட்டி தேனில் கொடுக்க கிருணி யதிசாரம் மூடம உளைவு, தீரும்.

பஞ்ச மூலம்:-

திப்பிலி மூலம், சித்திரமூலம், பெருமூலம், சிறுமூலம், கூவிள மூலம் ஆக பஞ்ச மூலம் கலந்து ஐந்தும் ஒரொன்று பணவிடை.க ஆக கொண்டு வெதுப்பி பொடி செய்து வெருகடி பிரமாணம் காந்த பற்பத்திலாகிலும் லோக பற்பத்திலாகிலும் ஒரு பணவிடை கூட்டி தேனில் குழப்பி இரண்டு போது பத்து நாள் கொள்ள மூல வாய்வு வாத வாய்வு, சேற்பன வாய்வு யிவை யெல்லாந் தீரும்.

தாம்பிரத் தகடு வைக்கும் படி:-

தாம்பிரம் பலம்.5, கொண்டு வந்து யீச்சிறகு போலே தட்டி புளியிலை தண்ணீர் விட்டுக் கழுவி எலுமிச்சம் பழச் சாற்றிலூறப் போட்டு கழுவி எருக்கம் பாலிலூறப் போட்டு எடுத்துக் கொண்டு கெந்தகம் பலம்.5, எருக்கம் பாலிலூறப் போட்டு பின்னும் எருக்கம் பால் விட்டரைத்து தகட்டில் விட தகடெல்லா மொரு சட்டியில் வைத்து மேலுங் கீழும் கெந்தகப் பொடி போட்டு ஒரு சட்டி கொண்டு மூடி சட்டி வாயைச் சீலை மண் செய்து முழங்கால் மட்டும் எருவடுக்கி அதின் மேலே வைத்து அதின் மேலே அரையளவு சரம் எருவடுக்கி புடம் போடவும். ஆற விட்டு எடுத்தால் பற்பமாக விருக்கும். இந்தப் பற்பத்தை எருக்கம் பழுத்தல் சாறு விட்டரைத்து தகடு தட்டி இரண்டு எருக்கம் பழுப்பு அடுக்கி வைத்து எருக்கம் பழுப்புக் கொண்டு மூடி ஒட்டு வாயைச் சீலை மண் செய்து விருசிப் புடமாகப் பத்துப் புட மிட்டுக் கொள்ளவும். மறுபடி கள்ளிப் பால் விட்டரைத்து கெந்தகஞ் சற்றே போட்டு பதினாலு புடம் போட்டுக் கொள்ளவும். ஆக 24 புடமானால் எடுத்துக் கொள்ளவும். இதுக் கநுபானம் யிதிலொரு பணவிடையும் திரிகடுகு வெதுப்பி பொடி செய்து வெருகடிப் பிரமாணம் சீனியும் சேர்த்து இரண்டு போது 20 நாள் கொள்ள சத்தி குன்மம் 16-ம் வாய்வு 26-ம் மகோதரம் பீலிகை பெரு வயறு வெப்பு பாவை வாய்வுத் திரட்சி கெர்ப்ப விப்புருதி வயத்தில் வியாதி 60-ம் தீரும். சேற்பனம் 96-ம் வரட்சி காமாலையும் நீர்க் காமாலை யூதி காமாலை பயித்திய வாய்வு வாத வாய்வு, மூல வாய்வு, சேற்பன வாய்வு இவை யெல்லாந் தீரும். இதிலொரு

பணவிடை பஞ்ச மூலக் கசாயத்திலும், அட்ட கசாயத்திலாகிலும் வெருகடிப் பிரமாணம் தேனில் இரண்டு போது 40 நாள் கொள்ள கிரந்தி 6 வகையும் அதிசாரம் 12 வகையும் மூலம் 6 வகையும் தீரும் என்றறியவும். முன்னநுபானத்தின் படி பார்த்திட்டு வரவும்.

இரத_தாம்பூர_செந்தூரம்:-

தாம்பூரம் பலம்.உ, கெந்தகம் பலம்.க, கள்ளிப் பால் விட்டு ஒரு சாமமரைத்து ஒரு உட்டிலே வைத்து ஒரு ஓடு கொண்டு மூடி ஒட்டு வாயை சீலை மண் செய்து முழங்காலளவு எருவடிக்கி அதின் மேலே வைத்து அதின் மேலே அரையளவு உயர மெருவடிக்கித் தீப் போடவும். ஆற விட்டு எடுத்து கள்ளிப் பால் விட்டரைத்து யிப்படி அஞ்சு புடம் போடவும். யிப்படி எருக்கம் பால் விட்டரைத்துப் புடம் போடவும். பிறகு தாம்பிரத்தை எடுத்துக் கொண்டு யிதிலொரு பணவிடையும், திரிகடுகு வெதுப்பி பொடி செய்து வெருகடிப் பிரமாணம் தேனில் மத்திச்சு பத்து நாள் யிருபது போது கொள்ளவும். குட்ட ரோகம், சூலைக் கடுப்பு, அதிலுண்டான வியாதி 17-ம் சத்தி குன்மம் வலி குன்மம், எரிகுன்மம், அம்புலப் பயித்திய குன்மம் 16-ம் வாய்வு 26-ம் யீளை யிருமல் எலிகடி மந்தார காசம், காச சுவாசம், சுவாச காசம், சேற்றுமம் 96 உள் மாந்தை, சுரமாந்தை, யிவை யெல்லாந் தீரும். யிதிலொரு பணவிடையும் தேனில் குழைத்து கொடுக்க முன் சொன்ன வியாதியும் சதை யடைப்பன் கல்லடைப்பன் தீரும். யிதிலொரு பணவிடை நொச்சியிலைச் சாற்றில் கொள்ள சுரம், குளிர் மாறல் நாளு நாளைய மாறலும் யிவை யெல்லாந் தீரும். எடுத்த வியாதிக் கெல்லாம் சுக்கு தண்ணீரில் கொடுக்கவும்.

ரச_கற்பூரம்_கட்டியாக_வைக்க_முறை:-

இரதம் பலம்.உ, பச்சை மஞ்சள் சாறு தான் உலர்ந்த மஞ்சள் தட்டி கசாய மாக வைத்து தான் விட்டரைத்து திருத் துளசியிலையை புட்டவியலாக அவித்துச் சாறு கொண்டு ஒரு சாமமரைத்து அளிசிலை வேரு கசாயம் விட்டு ஒரு சாமமரைத்து எலுமிச் சம் பழச் சாறு விட்டு ஒரு சாமமரைத்து சீனிக் காரம் பலம்.3, ஒக்கக் கூட்டி முன் மருந்தும் சாறும் விட்டு ஒன்று யரைத்து கெங்கா சலக் குப்பி எழு சீலை மண் செய்து உலர விட்டு மருந்தைக் குப்பியிலிட்டு குப்பி வாயை வளப்பக் கல்லுக் கொண்டடைத்து ஒட்டி யடுப்பு போட்டு அதிலே ஒரு தாளியைப் புதைத்து நால் விரல் கனம் மணலிட்டு காடாக்கினியாகப் பனிரெண்டு சாமம் தீயெரிக்கவும். பிறகு ரச கற்பூர செந்தூர மெடுத்துக் கொள்ளவும். இதுக் கநுபானம் யிதிலொரு பணவிடையும் திரிகடுகு வெதுப்பி பொடி செய்து வெருகடிப் பிரமாணம் தேனில் இரண்டு நேரம் இருபது நாள் கொள்ள சத்தி குன்மம், வலி குன்மம், எரிகுன்மம், அட்ட குன்மம், பஞ்ச குன்மம் 16-ம் வாதம் 80-ம் வாய்வு 26-ம் சூலை வாய்வு 16-ம் புன் குடோரம், சொறி பறங்கி, வெடி பறங்கி, வாதசூலை, சன்னி வாதம், மண்டை சூலை, சூலை 17-ம் தீராத புண்களும், தாகம் வாய்வு, முழங்கால் முட்டி குட்டம் 18-ம் கிரந்தி, கரப்பன், தொடைவாளை, பக்க சூலை, நாவி சூலை, குன்ம சூலை, அண்டப் புத்து, அண்ட பவுந்திரம் கெற்ப விப்புருதி, யீளை, யிருமல், எலி கடி சேற்றுமம், 96-ம் மற்றுண்டான வியாதி களுந் தீரும்.

ரச_கற்பூரம்_தகடு_வைக்க:-

இரதம் பலம்.க, செங்கல் பொடியிட்டு அதின் மேலே உப்பிட்டு கொடுவேலி வேரை யரைத்து ஐந்து குகையாகப் பிடித்து அந்தச் சட்டி உப்பில் நடுவே குகையை வைத்து அதிலே யிரதத்தை யிட்டு யிரும்புச் சலாகை எட்டுகள் சிலாகை உப்பினால் றி மேலே ஒரு சட்டி கொண்டு மூடி சட்டி வாயை யேழு சீலை மண் செய்து அடுப்பில் வைத்து மூன்று நாள் தீ யெரிக்க நாலா நாள் தீயாற விட்டு யிறக்கி யெடுத்துக் கொள்ளவும். யிதுக் கநுபானம் யிந்தக் கற்பூரத்திலொரு பணவிடையு பனங் கருப்புட்டியில் வைத்து இரண்டு நேரமும் எட்டு நாள் கொள்ள சூலையும், பறங்கியும், அண்ட சூலையும், குன்மம் வாய்வும், வாத சூலையும் தீரும்.

நெடி_நவச்சாரம்_கற்பூர_ரச_வைப்பு:-

நெடி நவச்சாரத்தை கொண்டு வந்து சட்டியி லமட்டமாக ஒரு விரல் கனத்துக்கு போட்டு அதிலே பதினெட்டு களஞ்சு யிரதம் விட்டு அதில் குளச் செங்கல் பொடியும், உப்பும் கலந்து போட்டு சுட்ட செங்கொட்டை யதில் குள வைத்து அதின் மேலே செங்கல் பொடியும் உப்பும் போட்டு ஒரு சட்டி கொண்டு மூடி வாயை யேழு சீலை மண் செய்து ஒரு நாள் தீபாக்கினி யிட்டு இரண்டு நாள் காடாக்கினியிட்டு சட்டி மேல் சட்டி காய்வு யேறுமல் சாலகம் வளைந்து ஆமணக் கெண்ணெய்---நாலா நாள் குளிர ஆற விட்டு திறந்து பார்த்தால் கதிர் கதிர் ஆக வளர்ந்து யிருக்கும். அதில் ஒரு நாளைக்கு கால் பணவிடை கருப்புட்டியில் கொடுக்க ரெண்டா நாளரைப் பணவிடை மூன்று நாள் முக்கால் பணவிடை நாலா நாள் ஒரு பணவிடை எழு நாளைக்கு எழு பணவிடை கொடுக்க சூலை கடுப்பு, மண்டை சூலை, வாத சூலை, பறங்கி ஒட்டிய யிவைகள் தீரும். பத்தியம் பசுவின் பால் கூட்டவும்.

மருந்து:-

சுத்தி பண்ணின யிரதம் பலம்.க, சுத்தி பண்ணின கெந்தகம் பணவிடை.15, மனோசிலை பணவிடை.5, தங்கம் பணவிடை.க, பொன்னி மிளை பணவிடை.க, யிவை சேர மிளகு, தக்காளிச் சாறு விட்டு ஒரு சாமமரைத்து செம்பருத்தம் சாறு விட்டு ஒரு சாமமரைத்துப் பொடி பண்ணி ஒரு குழிப் பணியாரச் சட்டி உண்டாக்கி குழிக்குள்ளே போட்டு மருந்தை விட்டு ஒரு வட்டமாக உடைத்து அது கொண்டு மூடி யிசக்கு இசக்கு கட்டு மண் கருவேலம் பிசின் வெள்ளைக் கல்லு, கிட்டம், நல்ல வெல்லம், புளியங் கொட்டை

கோல், பொன் மெழுகு, கோசுவின் தேன், மொச்சு வளையில் ஓடு, இந்துப்பு, உயர் மண் குங்கிலியம் கடுக்காய்ப் பருப்பு, புங்கலரிசி யிவை சேர நன்றுயரைத்து தீயில் வெதுப்பி சுத்தியல் கொண்டு தட்டி தீயில் வெதுப்பி அந்த ஓட்டி சுள யிந்த மண் கொண்டு மூடி சட்டியை யடுப்பில் வைத்து சட்டி நிரம்ப தண்ணீர் வார்த்து அடுப்பிலே முங்கில் விறகு கொண்டு தீபாக்கினி மூன்று நாள் தீ யெரிக்கவும். தண்ணீர் காஞ்சுதானால் சீலையில் தோய்க்குப் புளிந்து போட்டு வரவும். மறுபடி தண்ணீர் விட்டு வரவும். நாலா நாள் ரப தீபம் கொடுத்து எடுத்துப் பார்க்க செந்தாமரைக் கும் பூப் போலே யிருக்கும். அருபானம் யிதிலொரு பணவிடை விராகனிடை ஆவரைத் தயிலத்தில் கொடுக்க சலக் கழிச்சல் 10-ம் தீரும். யிதிலொரு பணவிடை தேனில் இரண்டு நேரமும் 10 நாள் கொள்ள உட்டிணம், பறங்கி மூலை வாய்வு 16-ம் வயத்தில் வலியும் தீரும். யிதிலொரு பணவிடையும் சிங்கார சூரணத்தில் இரண்டு நேரமும் 10 நாள் கொள்ள யீளை, இருமல், எலிகடி, மந்தார காசம், காச சுவாசம், சுவாச காசம், சேத்துமம் 96-ம் தீரும். யிதிலொரு பணவிடை அட்ட சூரணம் வெருகடி பிரமாணம் தேனில் குழைத்து இரண்டு நேரமும் 40 நாள் கொள்ள வாதம் 80-ம் வாய்வு 16-ம் குன்மம் 16-ம் சத்தி குன்மம், வலி குன்மம், எரி குன்மம், அம்பல பயித்தியம் அட்ட குன்மம் வாய்வு 26-ம் தீரும். யிதிலொரு பணவிடை ஏலாதி சூரணம் வெருகடிப் பிரமாணம் தேனில் இரண்டு நேரம் 40 நாள் கொள்ள பயித்தியம் 128-ம் உட்டிண ரோகம் 326-ம், சுக்கிலப் பிரமியமும், உள்ளுருக்கி, எலும்புருக்கி, வெள்ளை விழுசிறதும், இந்திரிய கண்டியும், கல்லடைப்பன், சதையடைப்பன், நீரடைப்பன், யிவை யெல்லாந் தீரும். இதிலொரு பணவிடையும் பூமி சர்க்கரை கிழங்கும், ஆலம் பழமும் சூரணம் பண்ணி தேனில் இரண்டு நேரமும் நாற்பது நாள் கொள்ள தாது வற்த்திக்கும். காயம், வச்சிர காயமாம். அழகு பிறக்கும்.

(வேறு)

சாதிலிங்கம் பலம்.10, சுத்தி பண்ணின இரசம் பணவிடை.10, சதகுப்பை மேனி யிலை, நொச்சியிலை, முருங்கைப் பட்டை, அரிசு யிலை யெல்லாம் அரைத்து குகையாய் பிடித்து ஒரு சட்டியில் செங்கல் பொடியிட்டு நடுவே குகை பிடித்து வைத்து அதிலே யிரசத்தை விட்டு அதை ஒரு சட்டி கொண்டு மூடி வாயை யேழு சீலை மண் செய்து ஐந்து நாள் தீப் பிரித்து குளிர ஆற விட்டு எடுக்கவும். இந்த பற்பம் திருநீறு போலே யிருக்கும். இதிலொரு பணவிடை பழை வெல்லத்திலே வைத்து இரண்டு நேரமும் 40 நாள் கொள்ள மூலை பறங்கி, சத்தி குன்மம், வலி, குன்மம், எரி குன்மம் 16 மத்துண்டான வியாதி தீரும்.

<u>குமரி பற்பம்</u>:-

இரசம்.5, பணவிடை, கெந்தகம் 5 பணவிடை, வெண்காரம் 5 பணவிடை, அரப்பொடி 10 பணவிடை, குமரிச் சாறு விட்டு ஒரு சாமமரைத்து அடையாக பிடித்து கலத்திலே யிட்டு வெயிலிலே வைக்கவும். உலர விட்டு மற்று நாளெடுத்துக் கொள்ளவும். இதுக் கருபானம் யிதில் இரண்டு பணவிடை திரிகடுகு வெதுப்பி பொடி செய்து வெருகடி பிரமாணம் தேனில் இரண்டு நேரமும் பத்து நாள் கொள்ள சத்தி குன்மம், வலி குன்மம், எரிகுன்மம், அம்பல பயித்தியம், வறட்காமாலை, நீர்க் காமாலை, பயித்திய காமாலை, பாண்டு ரோகம், மூல ரோகம், குன்மம் 16-ம், யீளை யிருமல் எலிகடி யிவைகள் தீரும்.

(வேறு)

பழங் கிட்டம், யிரும்புக் கிட்டம் கொண்டு வந்து பசுவின் கோமியத்தில் காச்சிக் காச்சி பத்து தரம் காய்ச்சி கடப்பாரை கொண்டு யிடித்து தூளாக்கி கையாந்தகரை சாறு வாத்தரைத்து ஒரு ஓட்டிலே தப்பி ஒரு ஓடு கொண்டு மூடி ஓட்டு வாய் சீலை மண் செய்து முழங்கால் மட்டு உயரம் எருவடுக்கி அதின் மேலே வைத்து அதின் மேலே யரையளவு உயரம் எருவடுக்கி தீப் போடவும். மறு நாளாற விட்டெடுத்து மறுபடி கையாந்தகரைச் சாறு விட்டு ஒரு சாமம் அரைத்து ஒரு ஓட்டிலே தப்பி ஒரு ஓடு கொண்டு மூடி ஓட்டு வாயைச் சீலை மண் செய்து முழங்கால் மட்டும் எருவடுக்கி அதின் மேலே வைத்து அதின் மேலே யரையளவு உயரம் எருவடுக்கிப் பொடி எருப் போட்டு தீப் போட்டு மறுநாள் ஆற விட்டு எடுத்து கையாந்தகரைச் சாறு விட்டு அரைத்து இப்படி பத்துப் புடம் போடவும். இதிலொரு பணவிடை திரிகடுகு, வெதுப்பி பொடி செய்து வெருகடி பிரமாணம் தேனில் குழைத்து இரண்டு நேரம் நாற்பது நாள் கொள்ளவும். சத்தி குன்மம், வலி குன்மம் எரி குன்மம், அம்புலப் பயித்தியம், வறட்காமாலை, ஊது காமாலை, பயித்திய பாண்டு, ரோகம் விடபாகம், சேற்றுமம் 96-ம் மற்றுண்டான வியாதி யெல்லாந் தீரும்.

****

10.4.64.

முற்றும்

****